திராவிடநாடு

3—1—60 | வார வெளியீடு | விலை 16 காசு

அன்பு பிறக்குமா?

—[இரா. தமிழேந்தி]—

நாடு கெட்டுப் போனதே!
நன்மை மறைய லானதே!
கேடு எண்ணம் சூழ்ந்ததே!
கேண்மை, அன்பும் வீழ்ந்ததே!

அரிசி விலையும் ஏறுதே!
ஆள்வோர் மனமும் சீறுதே!
கரிப்பு எங்கும் பெருகுதே!
கனிந்த வாழ்வும் கருகுதே!

பசியும் பிணியும் ஆடுதே!
பட்டினிப், பஞ்சம் கூடுதே!
புசிக்கக் கூழும் இல்லையே!
போர்த்தக் கந்தலும் இல்லையே!

ஊருக் குழைப்போம் என்றனர்!
'ஓட்டு' வாங்கிச் சென்றனர்!
யாருக் காக உழைத்தனர்!
எல்லாம் அவரே பிழைத்தனர்!

வரிகள் தினமும் உயருதே!
வாழும் வழிகள் குறையுதே!
நரியின் ஆட்சி வந்ததே!
நல்லோர் நெஞ்சும் நொந்ததே!

ஆள்வோர்க் கன்பும் பிறக்குமா
அரிசி விலையும் இறங்குமா?
நாளும் மக்கள் பிழைப்பரா?
நமது அமைச்சர் உழைப்பரா?

தங்கக்கூண்டு தயாரிக்கிறார்!

—[ச. வெ. பாண்டியன்]—

"கிளி" விரும்புவது ஆகாய வாழ்க்கை! அதுதான் சுதந்திர வாழ்வாகும்! இது அதனுடைய இயல்பாகும்!

ஒருவன் 'கிளி'யை வளர்க்க விரும்பி, அதைப் பிடித்து கூண்டிலே அடைத்து, வேளாவேளைக்கு பாலும், பழமும் கொடுத்து அதைப் பாதுகாத்து வந்தாலும், பால் தகுந்தவாறு கிடைக்கிறது! சோற்றுக்கு அலைந்து தொலைய வேண்டியதில்லை! ஆகா! என்ன ஆனந்தவாழ்க்கை என்று கருதி அமைதியாகக்கூண்டிற்குள் அடைபட்டுக் கிடப்பதில்லை. மாறாக உணவு நன்றாகப்பெற்றாலும் கூண்டிற்குள்ளிருந்து கொண்டே வெளியே தலையை நீட்டும்! தனது அலகை வெளியே நீட்டி வெளியுலக வாழ்வையே எண்ணி வருந்தும்!

பார்! பார்!! என்ன பைத்தியம் இதற்கு! கண்ணின் மணிபோல் காத்து வருகிறேன். நேரம் தவறாது பாலோடு பழமும், சோறும் கொடுத்து வருகிறேன். என்றாலும் வெளியேதானே எட்டிப் பார்க்கிறது 'கிளி' என்று கவலைப்பட்டு, இதற்குக் காரணம் கூண்டு சரியில்லாததுதான். எனவே தங்கத்தாலான கூண்டு தயாரிக்க வேண்டியதுதான் என்றால் எப்படியிருக்கும்?

அவன் இச்செயல் கண்டு நகைப்போம்! 'கிளி'யின் குணமறியாக் குருடன் என்போம்! கிளி சாதாரணப் பறவை இனத்தைச் சார்ந்ததுதான். தன் வயிற்றை நிரப்புவதற்காக எங்கெங்கெல்லாமோ சென்று பெரும்பாடுபடத்தான் செய்கிறது. என்றாலும் அடிமை வாழ்வை விரும்பவில்லை!

அற்பமான பறவையினத்திற்கே இந்த விடுதலை உணர்ச்சி என்றால், மனிதகுலத்திற்கு—அதுவும் ஆறறிவுபெற்ற மனித இனத்திற்கு விடுதலை வாழ்வு எவ்வளவு முக்கியமானது என்பதைச் சொல்லாமலே அறிந்துகொள்ளலாம்!

ஆனால், கிளியை ஒருவன் தன் விருப்பத்திற்காகப் பிடித்து அடைத்துக்கொண்டது போல, மனிதர்களையும் தன் கைக்குள் வைத்து அடக்கி ஆண்டு தனது விநோத ஆசையைத் தணித்துக் கொள்ள நினைக்கிறார்கள் பலர்! விடுதலை விரும்பிப் பொங்கி எழும்போது சில ரொட்டித்துண்டுகளை வீசி தன்வயப்படுத்த முனைகிறார்கள் — தங்கக் கூண்டு தயாரித்தவனைப்போல!

தங்கக்கூண்டு தயாரிப்பவர் டிகால்! 'பிரெஞ்சு' நாட்டுத் தலைவர்!

கிளிகளாக அடையுண்டு கிடப்போர் 'அல்ஜீரிய' மக்கள்!

பலநூறு ஆண்டுகளாக 'பிரெஞ்சு' ஏகாதிபத்தியம் அல்ஜீரியர்களை அடிமைகொண்டு, அவர்களின் வாழ்வு, வளம் எல்லாவற்றையும் உறிஞ்சிவந்துள்ளது! அவர்களது இரத்தத்தால் தனது வாழ்வைப் பெருக்கிக்கொண்டது பிரெஞ்சு ஏகாதிபத்தியம்!

ஆதிக்க புரியினர்களின் வாழ்வு அற்ப வாழ்வாகும்! அது எக்காலத்தும் நிலைத்திருக்காது! என்றாவது ஒரு நாள் அதன் தூண்கள் பிடுங்கி எறியப்படும். இது வரலாறு விளக்கும் பாடம்!

இதைப் 'பிரெஞ்சு' ஏகாதிபத்தியங்கள் அறியவில்லை. இல்லை, ஆதிபத்திய ஆசையால் அறிவிழந்து கிடக்கிறார்கள். அவ்வளவுதான். ஆனால் கொதித்தெழும் மக்கள் குரலுக்கு அவர்கள் பதில்சொல்லியே ஆகவேண்டும்!

இந்த அடிப்படையில்தான் 'அல்ஜீரியர்கள்' தங்கள் தாயகத்தை—தாய்த்திரு நாட்டைமீட்க அமைதி வழியில் அறப்போர் செய்து வந்தனர்! 'பிரெஞ்சு' அரசுக்கு இது அற்பமான ஒன்றாகத்தான் முதலில் இருந்தது. இவர்களால் என்னசெய்யமுடியும் என்ற ஆணவத்தில் இருந்தது!

தாயகமீட்பாளர்களின் பாதையிலே புதிய திருப்பம் ஏற்பட்டது. அமைதிப் போராட்டம் வழியில்லை, இனி "ஆயுதப்" போராட்டம்தான் தேவை எனக் கருதியது. எனவே 1954-ம் ஆண்டிலிருந்து அதன் போர்முறை மாறலாயிற்று!

தாயகத்தை விடுவிக்க விரும்புவோரே தயாராகுக! போர்க்கொடி தூக்குங்கள்! கரங்களிலே துப்பாக்கி தூக்குங்கள்! தூள்தூளாக்குங்கள் ஆதிக்கபுரியினர்களை! உடல் நமக்குப் பெரிதல்ல! உயிர் நமக்கு முக்கியமல்ல! வாழ்வைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்! வீறுகொண்டெழுவோம்! வீணர்கொட்டத்தை முறியடிப்போம்! தாயே உயிர்! தாய்நாடே எல்லாம்! அடிமைகொள்வோரை ஆயுதபலத்தால் அழிப்போம் வாரீர்! வாரீர்! என்று போர்க்குரல் முழங்கினர்! "தேசிய விடுதலை முன்னணி" அமைத்து விடுதலை அல்லது வீரமரணம் எனப் பண் இசைக்கலாயினர்!

"பிரெஞ்சு" பலம் பொருந்திய நாடுகளில் ஒன்றல்லவா! ஏதும் அற்றவர்கள் "எதிரொலி" எழுப்புவதைக்கண்டு எல்லாம் உள்ளவர்கள்வாளா இருக்கமுடியுமா? எனவே பிரெஞ்சு இராணுவம் பறந்தது அல்ஜீரியா நோக்கி! விட்டேனா பார் என்று சுட்டுக்கொன்றது—விடுதலை வீரர்களை! என்னை எதிர்ப்பதா என்னும் வீராப்பில் சுட்டுத் தள்ளின இளம் சீயங்களை!

விடுதலை முன்னணியினரும் சும்மா இருந்துவிடவில்லை. அவர்களது பயங்கரத் தாக்குதல் கண்டு தயங்கவில்லை! துவழவில்லை. அவர்கள் உயிரையே அர்ப்பணித்தவர்களாயிற்றே! இவர்களும் ஆயுதமேந்தித் தாக்கினர்! அயலானை ஆவேசத்தோடு பழி வாங்கினர்...

இப்படி ஐந்து ஆண்டுகள்! விளைவு எப்படியிருக்கும்! நாடே போர்க்களமாக இருக்கிறது. அமைதியில்லை! ஊரெங்கும் துப்பாக்கிச் சத்தம்தான்! பெரிய இராணுவம் சென்றும் விடுதலை விரும்பிகளை அடக்கமுடியவில்லை!" தூக்கித் தூக்கிப் போட்டு உதைத்தாலும், சுட்டாலும் அவர்கள் அயர்ந்துவிடவில்லை!

அறுபது திங்களாக அந்நியர்களின் அட்டகாசத்தை, போர் வெறிக்குணத்தை எதிர்த்து வருகிறார்கள். அதுமாத்திரமல்லாமல் அல்ஜீரியாவிலேயே மாற்று அமைச்சரவை ஒன்றையும் இவர்கள் அமைத்து உறுதிப்பாட்டோடு உழைத்து வருகிறார்கள்!

1954லில் ஆரம்பிக்கப்பட்ட இப் போர் நடவடிக்கை இன்னும்

(4-ம் பக்கம் பார்க்க)

வசைபாடுவோர் கவனத்திற்கு!

மலர் 13 ஆண்டுச் சந்தா ரூ. 8. (3-1-60) தனிப் பிரதி 16-காசு இதழ் 25

"எதற்கெடுத்தாலும் வடக்குத் தெற்கு என்று பேசவும், நாட்டைப் பிளவுபடுத்தவும் பிரிவினை உணர்ச்சியைத் தூண்டவுமான செயல்களில் தி. மு. க. வினர் ஈடுபடுவது வாடிக்கையாகிவிட்டது. இவர்களுக்கு இதைத் தவிர வேறு ஒன்று தெரியாது போலும்! எனவேதான் வடவாதிக்கம் வளர்கிறது—இங்கே வறுமை வாட்டி வதைக்கிறது என்று வாய் ஓயாமல், நாள் தவறாமல் பேசி வருகிறார்கள். இவர்கள் இப்படிப் பேசுவதில் உண்மை எதுவும் இல்லை. தங்களுடைய பிரச்சார சாதனமாக இதனைப் பயன்படுத்தி ஆதரவைப் பெறலாம் என்ற நோக்கத்துடனேயே இந்த முறையைக் கையாளுகிறார்கள்'' என்று கனம்களிலிருந்து சாதாரண கதராடைத் தொண்டன் வரையிலும் பேசிப் பெருமிதமடைவதை நாம் அறிவோம்—நாடும் அறியும்.

ஆனால், உண்மை எங்கே இருக்கிறது? அவர்களது மறுப்புரைகளிலா? அல்லது நாம் கூறும் ஆதாரத்தோடு கூடிய சம்பவங்களிலா என்பதை நடு நின்று எண்ணிப்பார்ப்பவர்கள் நிச்சயமாக உணரமுடியும்.

எதற்கெடுத்தாலும் வடக்கு நோக்கித்தான் நிற்க வேண்டுமா என்று நாம்மட்டும் கேட்டால், இந்தப் 'பெரிய மனிதர்'களின் மறுப்புரைகளில் உண்மையும் பொருளும் இருக்கின்றன என்று எண்ண இடமுண்டு. ஆனால், இதனை நாம்மட்டும் கூறவில்லை. நாட்டின் நாலாபக்கங்களிலிருந்தும் இந்தக்குரல் எழும்பியவண்ணம் உள்ளது. இதனை மூடி மறைக்கும் சாதனமாகத் தங்கள் அதிகாரத்தையும் செல்வாக்கையும் ஆளும்கட்சி பயன்படுத்தி வருகின்றது.

வடநாடு வளமும் செல்வாக்கும் சிறப்பும் பெற வேண்டுமென்பதில் டில்லி அரசு எவ்வளவு கண்ணுங் கருத்துமாக உள்ளது என்பதற்கு நாம் இதுவரை எடுத்துக்காட்டிய சான்றுகள் போதாது. இவை மட்டுமல்ல; இன்னும் பற்பல உள்ளன என்று கூறி அதற்கு விளக்கமும் தருகிறார் உயர்நீதி மன்றத் தலைவர் திரு. என். இராசகோபால் அய்யங்கார் அவர்கள்.

'நாட்டின் ஒரு மூலையில் இருக்கும் சென்னையில் வாழும் ஒருவர் மத்திய சர்க்கார் இலாகாக்களின் உத்தரவுகளுக்கு எதிராக ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டுமானால், அவர் இங்கிருந்து சுமார் **1500** மைல்களுக்கு அப்பாலுள்ள பஞ்சாப் உயர்நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டியுள்ளது. எனவே இத்தகைய நிலைமையில் நீதி மறுக்கப்படும் தன்மைகள் காணப்படுகின்றன...... இராச்சியங்களிலுள்ள மத்திய சர்க்கார் அதிகாரி போட்ட உத்தரவுபற்றிய ஆட்சேபமோ அப்பீலோ மத்திய சர்க்காருக்கோ அல்லது இந்த இராச்சியத்திற்கு வெளியே உள்ள அதிகாரிகளுக்கோ கொண்டுசெல்லப்படவேண்டியுள்ளது. ஏனெனில் மத்திய சர்க்கார் அலுவலகங்கள் எல்லாம் அந்தக் கோர்ட்டின் நிர்வாக அதிகாரத்துக்கு உட்பட்டிருக்கின்றன. எனவே நீதி கிடைப்பது கடினமாகிறது.''

எங்கோ ஆயிரத்தைந்நூறு கல் தொலைவில் இருக்கும் ஒரு நீதி மன்றத்தை நாடி நீதிபெறச் சென்றாலும், அங்கு நீதி கிடைக்கிறது கடினமாக இருக்கிறது என்று கவலையோடு தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார் நீதிபதி அவர்கள். சென்னையிலுள்ள ஒருவருக்கு நீதி வழங்கும் உரிமை பஞ்சாப்பில்தானா இருக்கவேண்டும்! ஏன், சென்னையில் இருக்கக் கூடாதா என்று கேட்கிறார்.

வடக்காவது தெற்காவது என்று வாய் வேதாந்தம் பேசும் வம்பு முகாமினர் இதனை ஊன்றிக் கவனிக்க வேண்டுகிறோம்.

வளம் அங்கே!

வாய்ப்பு அங்கே!

வசதி அங்கே!

நிதி அங்கே!

நீதி அங்கே!

அதிகாரம் அங்கே!

என்றால், இங்கே என்ன எஞ்சியுள்ளது? எண்ணிப் பார்க்க வேண்டாமா தேசியத் தோழர்காள்? வறிதே நம்மை வாயார வைது தள்ளிவிட்டால் போதுமா? உண்மையை உணரும் உளப்பாங்கை உடையவர்களாக மாறவேண்டாமா இங்குள்ள காங்கிரஸ் நண்பர்கள். நமக்கு எந்த அதிகாரத்தை விட்டுவைத்திருக்கிறது டில்லி! எதற்கெடுத்தாலும் வடக்கு நோக்கிக் காவடி எடுத்த வண்ணம்தானே நமது அமைச்சர்கள் உள்ளனர். இதற்குப் பேர்தான் சுதந்தரமா? இன்னொருவர் தயவால் வாழும் நிலைதான் சுதந்தரமா? எது சுதந்தரம்? எப்படியிருக்கவேண்டும் சுதந்தரம்? அதற்கு விளக்கம் தந்துள்ளார் நீதிபதி அவர்கள்—நேர்மையும் நீதியுமுள்ளவர்கள் நினைத்துப் பார்க்கட்டும் என்று!

2-ம் பக்கத் தொடர்ச்சி

நடந்துகொண்டுதான் இருக்கிறது! இதன் விளைவாக நாடு கண்ட அலங்கோலம் எண்ணிலடங்கா! நாட்டிற்கு ஏற்பட்டநட்டம் சொல்லி முடியாது. பிரெஞ்சுச் சர்க்காரின் கணக்குப்படி இப் போராட்டத்தினால் இறந்தவர்கள், காயமடைந்தவர்கள், காணாமல் போனவர்கள் கிட்டத்தட்ட **2,39,665** பேர்களாகும். இதில் பிரெஞ்சுப்படைகளில் இறந்தோர் **9300**. காயமடைந்தோர் **22000**. புரட்சியாளர்களில் இறந்தவர்கள் **1,20,000** பேர். காயமடைந்தவர்கள் **55,000** பேர். ஐரோப்பியக் குடிமக்களில் இறந்தோர் **2070** பேர். **4600** பேர் காயமடைந்தவர்கள். முஸ்லீம்களில் இறந்தோர் **12000** பேர்; காயம்பட்டவர்கள் **7500** பேர். **9900** பேருக்கு துப்பு இல்லை.

ஐயோ! எவ்வளவு விலா நோகும் செய்தி! ஒரு இலட்சத்து இருபதினாயிரம் புரட்சி வீரர்கள் பழி வாங்கப்பட்டுள்ளனர்! நினைக்கவே நெஞ்சு வேகிறது! தாய்நாட்டை, தந்தையர் நாட்டை மீட்பதற்காக இவ்வளவு பேரா பழி வாங்கப் பட வேண்டும்?

இன்னும் "அல்ஜீரிய" சுதந்திர அரசின் தலைவர் **பேர்கத் அப்பாஸ்** அவர்கள் தரும் கணக்கைப் பார்த்தால் இதயம் நின்றுவிடும் போலிருக்கிறது. **"விடுதலைப் போரில் இறந்தவர்கள் 10 இலட்சம் பேராகும். மக்கள் தொகையில் கால் பகுதியினர் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்."** என்று அப்பாஸ் அவர்கள் அறிவித்துள்ளார்கள்!

ஒன்றல்ல! நூறல்ல! இலட்சமல்ல பத்து இலட்சம் பேர்! இறக்கடிக்கப்பட்டிருக்கின்றனர் — இவ்விடுதலைப் போரால்! எங்கும் இப்படிப்பட்ட கொடுமையினை நாம் கேட்டதில்லை எனலாம்! கடந்த உலகப்போரில், "கிரோசிமா, நாசகாதி" ஆகிய இடங்களில் வீசப்பட்ட அணுகுண்டுகளால்கூட இத்தனை பேர் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதைவிடப் பன்மடங்கு கொடியது இது!

இதைவிடக் கொடியது என்னவென்றால், இந்த நிலை இன்னும் நீடித்துக்கொண்டே இருக்கிறது! பிரெஞ்சு ஏகாதிபத்தியம் இரத்த வெறி கொண்டலைகிறதே தவிர, வேண்டியதைக் கொடுக்கத் தயாராக இல்லை. விடுதலைப் படையினரும் உள்நாட்டில் இராணுவ ஆட்சியைஉண்டாக்கிப்போராட்டத்தை வலுப்படுத்த முடிவெடுத்திருக்கின்றனர் — சமீபத்தில்!

நிலைமை எங்குபோய் முடிகிறதோ... நினைத்துப்பார்க்கவே முடியவில்லை.

இந்நிலைக்கு முடிவுகட்டுவது போல் செப்டம்பர் 16-ம் தேதி "டிகால்" ஒரு அறிக்கை வெளியிட்டார்! அதில் தனியாகப்பிரிந்து போவதா, கூட்டாட்சியின் அங்கமாக இருப்பதா அல்லது இணைந்து இருப்பதா என்று முடிவுசெய்ய நாலுவருட அனுமதி தேவை என்று தெரிவித்திருந்தார்! இதற்கு அப்பாஸ் அவர்கள் "சமாதானத்திற்கு நாங்கள் எப்போதும் தயார்! ஆனால் பிரச்சினைக்கு முடிவு சீக்கிரம் தெரிய வேண்டும்" என்று பதிலளித்துள்ளார்.

உண்மையில் "டிகாலின்" அறிக்கை நல்ல எண்ணத்துடன் எழுந்தது அல்ல. அமெரிக்காவிலிருந்து வருகிற "நியூ லீடர்" என்ற வார ஏடு தனது அக்டோபர் 5-தேதிய இதழில் இதுபற்றிக் கீழ்க்கண்டவாறு கூறுகிறது:— "டிகாலின் திட்டம் போராட்டத்திற்கு ஒரு முடிவுகட்டவேண்டும் என்ற அடிப்படையில் எழவில்லை. இது பிரெஞ்சு மக்களையும் உலக எண்ணத்தையும் ஈர்க்கச் செய்த ஒரு நடவடிக்கையாகும்."

மேலும் இதே இதழ் அக்டோபர் 12ம் தேதிய தனது "அல்ஜீரியா டிகாலுக்குப் பதிலளிக்கிறது" என்ற கட்டுரையில், "டிகாலின்" பிரிந்து போதல், கூட்டாட்சியில் இருத்தல் அல்லது இணைந்திருத்தல் என்ற மூன்று திட்டத்தில் அவர் "இணைந்திருத்தலைத்தான்" விரும்புகிறார் என்றும், பிரிந்து போனால் பொதுவுடைமையருக்கு அடிமையாக நேரும் என்றும், கூட்டாட்சியில் இருந்தால் வளர்ச்சிக்கு வழியில்லை என்றும், இணைந்திருந்தால்தான் மக்கள் நலமாகவும் செழிப்புடனும் வாழ முடியும் என்று பேசுகிறார் என்றும் கூறுகிறது.

மேலும் அவ்விதழ் "இந்நாலு வருடத்திற்குள் ஏராளமான தொழிற்சாலைகள், ரோட்டு வசதிகள், மருத்துவக் கல்லூரிகள், மற்றக் கல்லூரிகள்... இத்தியாதி காரியங்களைச் செய்துவிட்டால் மக்கள் பிரியும் எண்ணம் கொள்ள மாட்டார்கள் என்றும் நினைக்கிறார்" என்பதாகவும் கூறுகிறது!

"டிகாலின்" கள்ள உள்ளத்தையும் நாம் இதில் காண முடிகிறது. அவர் உள்ளத்தில் "தளபதி"யின் நோக்கம்தான் இருக்கிறதே தவிர, தார்மீக எண்ணம் உண்டாகவில்லை!

"அல்ஜீரியாவின் விடுதலை அழிவுக்கு வழி வகுக்காது. ஆக்கத்திற்குத்தான் அடிகோலும்" என்ற "முன்னணி"யின் அறிக்கை அவர்களின் கடமை உணர்ச்சியையும், கொள்கையில் கொண்ட ஈடுபாட்டையும் நமக்குக் காட்டுகிறது. இதை "டிகால்கள்" உணர வேண்டும்.

இவ்வளவு பேரின் உயிர்கள் வீணாகப் பிடுங்கப்பட்டும் உலக மக்களின் கருத்து இங்கு செலுத்தப்படாதது நமக்கு வியப்பை அளிக்கிறது! அணு குண்டுகளால் ஏற்பட இருக்கிற அழிவுகளைத் தடுக்கக் கூடிப்பேசும் "பெருந்தலைவர்களுக்கு" அணுகுண்டு உபயோகப்படுத்தப்படாமலே ஏற்பட்டு வரும் இவ்வநியாயத்தை, கொடுமையைப் பற்றிப் பேச மனம் வரவில்லை என்பது வேதனையளிக்கிறது!

ஆசியாவின் ஜோதி விடுதலை விரும்பும் நாட்டிற்குப் பரிந்து பேசுபவர் என்று வெளியில் பெயர் பெற்றவர்! அவர்கூட "இது உள்நாட்டு விஷயம்" என்று வாய் திறக்காதிருக்கிறார் இதுபற்றி! உலக எண்ணத்தைப் பிரதிபலிக்கும் ஐ. நா. சபைகூட இன்னும் விழித்துக்கொண்டு ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆசியா — ஆப்பிரிக்க நாடுகள் ஐ. நா. விற்கு இது சிக்கலைக் கிளப்ப எடுத்த முயற்சிகூட இல்லை என்றாகிவிட்டது.

விடுதலையே! உன் கதி இதுவோ!

★

துன்பத்தின் எல்லையிலே....

அ. ஹபீப்முஹம்மது

வாழ்க்கையில் எவ்வளவுதான் சுகதுக்கங்கள் ஏற்பட்டாலும், ஏழை ஏகாம்பரம் வாழ்வில்மட்டும் துன்பம், துயரம் எல்லாம் தலைவிரித்தாடத்தான் செய்தது. அது அவனுடைய குற்றம் அல்ல. காலப்போக்கிலே அவனது சூழ்நிலை அவனுக்கு அத்தகைய வேதனையை அளித்தது. வறுமை அவனது உள்ளத்தை வாள்கொண்டு அறுத்தவண்ணமாகவே இருந்தது. இவ்வளவு துன்பம்தான் அனுபவிக்கின்றோம் என்று இல்லாமல், மேலும் மேலும் அவனைத் துன்பம் முற்றுகையிட்டுக் கொண்டேவந்தது. பொன்னுனை வாழ்நாள் எல்லாம் சோகத்திலேதான் சென்றுகொண்டிருந்தது. ஏகாம்பரம் இத்தகைய கசப்பான வாழ்க்கையிலேயே வெறுப்புக் கொண்டான்! பாழும் உலகம் ஏகாம்பரத்தை ஏறிட்டுபபார்க்கவும் இல்லை. வாழ்வுக்கு வழிவகுக்கவும் வாய்ப்புக்கொடுக்கவில்லை!

ஏகாம்பரம் உலகத்தில் ஓர் தனி மனிதனுக, தரித்திரத்தின் எல்லையாகவே வாழ்ந்தான். அவனது சீர்கேடான நிலையை எவரும் சிந்தித்துப்பார்க்கவில்லை, சமுகத்தின் அத்தகைய போக்கு ஏகாம்பரத்திற்கு ஒரு புறம் ஏளனச் சிரிப்பையும், மறுபுறம் அடக்க முடியாத ஆத்திரத்தையும் உண்டுபண்ணின. ஒரு காலத்தில் நல்ல நிலைமையிலே வாழ்ந்த ஏகாம்பரம்தான் காலச்சுழலின் காரணமாக ஏழ்மை நிலையை அடைந்தான்.

ஏகாம்பரத்திற்கு மனைவியும், மக்களும் உண்டு. குழந்தைகளில் ஒருவனைத் தவிர, மற்றவைகளெல்லாம் மரணயாத்திரைக்குச் சென்றுவிட்டன. கடைசியாக 10-வயதுச் சிறுவன் மட்டும்தான் காலரா நோயிலிருந்து தப்பித்துக்கொண்டான். அந்த அருமை மகனையாவது கண்டு வாழ்க்கையில் ஆனந்தமடையலாம் என்றுதான் எண்ணியிருந்தனர்.

சிறுவன் முத்து தந்தையைப் போன்ற குணமும், தாயைப் போன்ற முகமும், அமையப்பெற்றவன். துன்பத்திலேயே தத்தளிப்பது போதாதென்று அவனும் படுக்கையிலே படுத்துவிட்டான். சுரம் கடுமையாக இருந்தது. ஏகாம்பரத்தின் மனைவி அலமேலு தன் மகனின் பரிதாபகரமான நிலையைப் பார்த்தாள்; தலையிலும், வயிற்றிலும் அடித்துக்கொள்வாள். பெற்ற மனம் தாளாமல் தன்னையே நொந்துகொள்வாள்.

ஒருநாள் முத்துவின் உடல்நிலை மிகவும் மோசமாகப்போய்க்கொண்டிருந்தது. அலமேலு மைந்தனைப் பார்த்தவாறு அழுதுகொண்டிருந்தாள். அந்தச் சமயம் ஏகாம்பரம் வீட்டினுள்ளே நுழைந்தான்! அலமேலுவின் அழும் சப்தம் கேட்டு ஏகாம்பரம் "அலமேலு! அழாதே! ஏன் அழுகிறாய், நமக்கு இது ஒரு சோதனைகாலம், நம் கஷ்டகாலம் நம்மை விட்டுவிட்டுப்போகுமா? எப்படி இருந்த நாம் எப்படி ஆனோம், எல்லாம் நம் கையிலா இருக்கிறது? முத்துவைப் பார்த்து ஏன் அழுது அழுது பெருமூச்சுவிடுகின்றாய். நீ அழும் ஒவ்வொரு குரலும் என் அமைதியிழந்த நெஞ்சைத்துளைக்கிறது. ஐந்துபேர் கைகட்டி என்னிடம் நின்ற காலம்போய் நான் அத்தகையோர்களுக்கு அடிமையாகிவிட்டதை நினைக்கும்போதுதான் என் உள்ளம் குமுறுகிறது. அலமேலு! உன்னை நல்ல நிலைமையிலே வைத்துப்பார்க்க முடியாமல் இந்தப் பரதேசிக் கோலத்தோடு பார்க்கின்றேனே! எல்லாவற்றிற்கும் இக்தப்பாவிதான் காரணம்! அழாதே அலமேலு...அழாதே. முத்து பிழைக்கிறபடி பிழைக்கட்டும்'' என்று துக்கம் தொண்டையை அடைக்க, விம்மல் நெஞ்சைப் பிளக்கத் தன் அருகே இருக்கும் மைந்தனை, குற்றுயிராயிருக்கும் தன் ஒரே அருஞ் செல்வத்தைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டான்! இத்தகைய சோகக் காட்சிகள் ஏகாம்பரத்தின் உள்ளத்தை என்னவோ செய்தது? மேலே போட்டிருந்த துண்டை எடுத்து வாயைப் பொத்திக்கொண்டு அந்தக் கொடூரக் காட்சியைக் காணச் சகியாமல் திரும்பிக்கொண்டு அழுதான். தன் மைந்தனைப்பார்க்கப் பார்க்க அவன் துயரம் இன்னும் மேலோங்கத்தான் செய்தது.

அலமேலுவின் இளகிய நெஞ்சமும் சற்று நேரம் அமைதியாக இல்லை. மைந்தனைப்பார்த்து, "அரும்பாடுபட்டு வளர்த்தேன்! இராத்தூக்கம், பகல் தூக்கம் இல்லாமல் உன்னை இமைகளில் வைத்துக் காப்பாற்றினேன். என்னை விட்டுவிட்டுப் பிரியப்போகின்றாயா? அப்பா என்னைப் பாரடா கண்ணு, உன் அம்மாவின் முகத்தைப் பாரடா, உன்னுடைய நிலையைப் பார்க்கவே என் நெஞ்சம் பதறுகிதே, என் அருஞ்செல்வமே என் குழந்தைகளையெல்லாம் இழந்தபின்னும் உன்னையாவது நல்ல நிலையில் காணவே எண்ணினேன். என் எதிர்கால வாழ்க்கையில் வெற்றியை ஏற்படுத்துவாய் என்று கனவு உலகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தேன்! அந்தக்கனவெல்லாம் எனக்கு ஏமாற்றம்தானா? என் எண்ணமெல்லாவற்றையும் தகர்த்து எரித்துவிட்டாயடா? பெற்ற மனம் வற்றிப்போய் விட்டதே! என்னை அம்மா, அம்மா என்று அநேகதடவை அழைப்பாயே! இனியும் அப்படி அழைப்பாயோ? உனக்கு இத்தகைய சோதனை ஏன் வரவேண்டும்! உன்னைக் காப்பாற்றி நல்ல நிலையில் காணக்கொடுத்துவைக்காதுபோன நான் இனிமேல் உலகில் இருப்பதும் ஒன்றுதான், இறப்பதும் ஒன்றுதான். என் கண்ணே மீண்டும் நீ நல்ல நிலையை அடையமாட்டாயா? நீ போய்விட்டால் எனக்கு இவ்வுலகில் வேலையில்லை. உனக்கு இடம் இல்லாத உலகில் எனக்கும் இடமில்லை. உன்னை ஆதரிக்காதவர்களா என்னை ஆதரிக்கப் போகிறார்கள்? என் செல்வமே! ஹோ... என்று துக்கம் உள்ளத்தைப்பிளக்க, சோகம் நெஞ்சைத் தாக்க ஏழ்மை உடலை வருத்த வறுமை வாழ்க்கையைப் பாழ்படுத்தத் தன் மகனைப் பார்த்துக் கூறிக் கண்ணீர்விட்டாள். கண்ணீர்ப் பெருக்கினிடையே தன் கடந்தகால வரலாறுகளை எண்ணவும் தொடங்கிவிட்டாள்.

ஏகாம்பரம் ஏதோ ஒரு அலுவலகத்திலே கணக்கெழுதும் குமாஸ்தாவாக காலங்கழித்து வந்தான். மானேஜர் மாணிக்கம் ஒரு தினுசான ஆசாமி. என்றாலும் தன் பணியினைச் செய்து ஒருவாறு காலத்தை நகர்த்திக்கொண்டு வந்தான். நாட்டு மக்களிடையே நல்லவன் என்று பெயர் எடுக்க எவ்வளவோ முயற்சிசெய்து கணக்கிலே மோசடி செய்யாமல் வேலையிலே கண்ணுங் கருத்துமாக இருந்துவந்தான். பல காரணங்களை முன்னிட்டுக் கம்பெனி நொடிக்க ஆரம்பித்துவிட்டது. அதன் காரணமாக அவனது வாழ்க்கையும் அஸ்தமிக்கும் நிலையை எட்டிவிட்டது. நல்ல பல கொள்கைகளைக் கடைப்பிடித்து வாழந்த ஏகாய்பரம்தான் சொல்லொணுத் துயருக்கு ஆளாகும்படி நேர்ந்துவிட்டது. அவன் மீது அவனைச் சூழ்ந்திருந்த சமுகமும், சூழ்நிலையும் அபாண்டமான பழியைச் சுமத்திற்று. எவ்வளவோ மனருடினன். முயற்சி வீணுகியது! ஆம் மானேஜர் மாணிக்கம் ஏகாம்பரத்தின்மீது பலவித குற்றச்சாட்டுகளை எடுத்துவீசினர். தன் கம்பெனியின் நிர்வாகம் பாதிக்கும் அளவிற்கு மோசம் செய்துவிட்டான் என்றும், கணக்கில் பிசகு செய்து பணத்தைக் கையாடிவிட்டான் என்றும், கம்பெனிக்கு எதிராகச் சதிசெய்யச் சகாக்களைத் தயார் படுத்திக்கொண்டு இருக்கிருன் என்றும் வசை புராணங்களை அள்ளி வீசினர். ஏகாம்பரம் ஏதும் சொல்லமுடியாதவனுனன். மனம் வெதும்பி வேதனைப்பட்டான்.

தான் அத்தகைய எண்ணம் கொள்ளவில்லை என்று நிரூபித்தான். உண்மையை ஒன்றுவிடாமல் எடுத்துரைத்தான். ஏழையின் வார்த்தை ஏகபோகத்திலிருப்பவர்களின் நெஞ்சில் ஏறுமா? ஏழைகளின கண்ணீர் எஜமானர்களின் இரக்கமற்ற இதயத்தைக் கரைக்க முடியுமா? எவ்வளவு முயற்சி செய்தும் அவன் குற்றவாளி என்ற பெயரைத்தான் ஏற்றுக்கொண்டான். பணம் படைத்தவர்கள் அவன் சொல்லுக்குச் செவி சாய்க்கவில்லை. கடைசியில் மானேஜர் போட்ட திட்டத்திற்கு ஏகாம்பரம் இலக்கானன்! வறுமையின் கொடுமை வந்து விளையாடியது. ஆம் ஏகாம்பரம் செய்த மோசடி காரணமாக, கம்பெனியில் ஏற்பட்ட நஷ்டாட்டைச் சரிசெய்யும் பொருட்டு அவனது பொருள்களையெல்லாம் அபகரித்துக்கொண்டார்கள். அவனைப் பராரியாக ஆக்கிவிட்டார்கள். இன்று ஏகாம்பரத்தைப் பாழும்சமுகம் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கும்படி செய்துவிட்டார்கள்.

கம்பெனியிலிருந்து விலக்கப்பட்ட, விரட்டப்பட்ட ஏகாம்பரம் வேலைக்காக அலைந்தான். உலகம் அவனுக்குத் திருடன் என்ற பெயரையும், மோசக்காரன் என்ற பெயரையும் சூட்டி அவனை வரவேற்க மறுத்தது. சமுதாயமே அவன் மேல் இரக்கம் காட்டவில்லை. மனம் நொந்தான். அதன் காரணமாகவே அவன் உள்ளம் துன்பத்தின் உச்சநிலைக்குப் போய்விட்டது. நல்ல நிலைமையில் நான்குபேரிடையே நாணயத்தோடு வாழ்ந்த அவனுக்கு இம்மாதிரியான சோதனைகாலம் வந்ததே என்று தலையில் அடித்துக்கொள்வான். மோதிக்கொள்வான். இரத்தம் கொட்டும். இரத்தத்தைக் கையில் எடுத்துப்பார்த்து 'என் உள்ளத்தை வேதனைப்படுத்தும் சமுகத்தாரிடையே நீ ஏன் காணப்படமாட்டேன் என்கிருய்? நான்தான் அதற்கு அகப்பட்டேனு? பணம் படைத்த சமுகம் உன்னை விரட்டுகின்றதா? நன்ருக விரட்டட்டும்'' என்று கடிந்து சொல்வான். அப்படிச் சொல்லும்போது அவன் உடல் வேதனையால் கொதித்தெழும். என்னதான் இருந்தும் என்ன? அவன் குற்றவாளி?

கம்பெனியிலிருந்து நீக்கப்பட்ட அன்றிலிருந்தே அவன் குடும்பம் தத்தளித்தது. மனைவியின் கழுத்தில் உள்ள தாலிமட்டும்தான் பாக்கி இருந்தது...மற்றப்பொருள்கள் அனைத்தும் விற்று வேதனைப்பட்டு வாழ்க்கையை நடத்தினன். குடும்பபாரம் தாங்காமல் தவித்தான். அதன் காரணமாகவே அவனை வறுமை, ஏழ்மை எல்லாமே ஒரே சமயத்தில் சூழ்ந்துகொண்டன.

அலமேலு தன் கடந்தகால எண்ணங்களிலிருந்து விடுபட்டாள். பாவம் அவள்தான் என்ன செய்வாள்... ஏகாம்பரம் எங்கெல்லாமோ சுற்றிவிட்டுத் தன் வீட்டிற்கு வந்தான். படுக்கையில் முணகிக் கொண்டிருக்கும் தன் மகனைப் பார்த்தான். கண்ணீர் பெருகக் கதறினன்! அவன் குரல்அலமேலுவைத் தவிர வேறு எவரையும் கலக்கவில்லை. தன் மகனை எப்படியாவது காப்பாற்றி, நல்ல நிலைமையில் காணவேண்டும் என்று கனவு கண்டான்... பெருத்த ஏமாற்றமுற்ருன்! மனம் தாளாமல் அவன் உயிரை எப்படியாவது காப்பாற்றும் பொருட்டு வெளியே கிளம்பிவிட்டான்! அவன்உள்ளம் நிறையப் பயங்கரம் சூழ்ந்திருந்தது. சென்றுவிட்டான். அலமேலு தன் புதல்வனைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டாள்.

அன்று மாலை எவ்வளவோ பிரயாசைப்பட்டு ஒரு வைத்தியரை அழைத்துக்கொண்டு தன் வீடு நோக்கி வந்தான். தன் வீட்டில் அழுகைக்குரல்கேட்டது... விரைந்தோடினன்; வீட்டினுள்ளே நுழைந்தான். அந்தோ! அவனது அருஞ்செல்வம் முத்து மறைந்துவிட்டான்!! அவனது அமைதியிழந்த கண்கள் அருமை மைந்தனைப் பிண உருவில்தான் கண்டன. அவன் நினைத்திருந்த எண்ணங்களையெல்லாம் மண்ணோடு மண்ணுகப் போகும்படி செய்துவிட்டு மறைந்துவிட்டான்... மைந்தனைக் கட்டித் தழுவி அலறினன்... அடித்துக்கொண்டான்... அவனை ஆறுதல்படுத்த யாரும் அங்கு இல்லை. வாயிலும், வயிற்றிலும் அடித்துக்கொண்டு கதறிய வண்ணம் மனம் தாளாமல் வெளியேறிவிட்டான்,

அன்று கிளம்பிய ஏகாம்பரம் தான் இன்னும் தன் குடும்பத்தையே எட்டிப்பார்க்கவில்லை. இன்னும் அவனைத் துன்பத்தின் எல்லை விட்டுவிடவில்லை. தூரத்தில் எவனே ஒருவன் திருடிவிட்டு அடிபட்டுக் கொண்டிருந்தான். ஏகாம்பரம் மனவேதனையுடன் அவ்வழியே போய்க்கொண்டிருந்தான். அத்திருடன் ஏகாம்பரத்தைப் பார்த்து "ஏகாம்பரம்... நான் திருடிய நகைகளையெல்லாம் உன்னிடம் தானே கொடுத்துவைத்தேன்... எல்லாவற்றையும் கொண்டுவா... வலி பொறுக்கமுடியவில்லையே!... அவனிடம்தான் கொடுத்திருக்கின்றேன்... அவனைப் பிடித்துக் கேளுங்கள்! போங்கள், போங்கள்" என்று தன் எதிரே நிற்பவர்களைப் பார்த்து அத்திருடன் கூறலானன்!...

ஏற்கெனவே திருட்டுப்பட்டம் சூட்டப்பட்டது போதாதென்று திருடன் வேறு பழியைத் தன்மீது

சாதித்தனால், அவனால் என்ன சொல்வதென்றே புரியவில்லை... ஏகாம்பரத்தை எல்லோரும் சூழ்ந்து கொண்டுவிட்டார்கள். 'எவ்வளவு தான் உண்மையை உரைத்தபோதிலும் உணரவில்லை அவர்கள்! குற்றத்தை ஆராயாமலேயே அவன் மேல் குற்றப்பத்திரம் பதிவு செய்யப்பட்டது. பாவம்! துன்பம் அவனைக் கண்டு இன்பம் கொண்டாடியது! சூழ்ச்சி அவனைக்கண்டு மகிழ்ந்து கூத்தாடியது! அவன் என்ன செய்வான்? செய்ய முடியும்? பயங்கர உலகத்தின், பலமான பிடியில் அவன் அகப்பட்டுக் கொண்டான்! பிடி தளரவில்லை. அந்தப் பயங்கரப்பிடி அவனைச் சிறையில் கொண்டுபோய்த் தள்ளியது. அவனுக்காக அனுதாபம் தெரிவிக்க யாரும் வரவில்லை. காரணம், அவன் குற்றவாளி...! மக்கள் மன்றம் அளித்த மகோன்னதப் பட்டம்!...பாழும்சமுகம் தன் விஷயத்தில் நடந்துகொண்ட பயங்கரமான முடிவைக்கண்டு உள்ளம் பதறினன். அவனது குரல் அனைத்தும் சிறைச் சுவர்களைத் தாண்டி வெளிவர முடியவில்லை.

தன் கணவர் சிறையில் இருக்கின்றார் என்பதையறிந்ததும் அலமேலு கண்ணீர் விட்டுக் கதறினாள்...'' காலமே! என் கணவரை ஏன் சோதிக்கின்றாய்... அவர் என்ன குற்றம் செய்தார்? அப்படி இருக்க ஏன் அவரைச் சொல்லொணாத வேதனைகளுக்கு ஆளாக்கவேண்டும்!... சமுகமே! என்னையும் உலகில் வைத்து ஏன் வேடிக்கைப் பார்க்கின்றாய்!... நான் பட்ட துன்பம் போதும்... வளமான வாழ்க்கையை இழந்தேன்!... நான் பெற்ற மாணிக்கங்களைப் பறிகொடுத்தேன்!... அன்புக் கணவரையும் சிறையில் வைத்துப் பார்க்கும்படியான பெரும் பாவியானேன்!... நான் மட்டும் ஏன் இத்தகைய காட்சிகளைக் கண்ட பின் உலகில் உயிர்வாழவேண்டும், என்னைக் கொன்றுவிடு!... ஏழைகளைக் கொடுமைப்படுத்தி குதூகலப்படுவதைவிடக் கொன்று மகிழ்ந்துபோ!... அப்பொழுது தான் எனக்கு நிம்மதி!... அமைதியெல்லாம்!... வளமில்லா என் வறண்ட வாழ்க்கைக்கு அதுதான் பேரின்பம்!...சமுதாயமே! என்னைச் சோதித்தது போதும்... மீண்டும், மீண்டும் சோதனைக்குள்ளாக்காதே!!...''

அலமேலுவுக்கும் உலகம் பயங்கரத்தையே கற்றுக்கொடுத்தது. அவளை ஆதரிப்பார் எவரும் இல்லை! தன் கணவரைப் பார்க்க ஓடினாள்! சிறைக்கூடம் நோக்கிச் சிறகொடிந்த பறவையென ஓடினாள்! கண்டாள் தன் கணவரை... கண்ணீரைச் சிந்தினாள்! ஏகாம்பரம் சமாதானப்படுத்தினன்... "அலமேலு! ஒன்றைமட்டும் தெரிந்து கொள்... வாழ்ந்தால் பணக்காரர்களாக வாழவேண்டும். ஏழையாக மட்டும் வாழக்கூடாது. ஏழையாக இருந்து வேதனைப்பட்டு வெந்து மடிவதைவிடத் தன்னைத்தானே மாய்த்துக்கொள்ளலாம். இது பணக்காரர் உலகம்... ஏழைக்கான உலகம் அல்ல அலமேலு...'' என்று ஏக்கத்தினிடையே கூறினான். பேசிக்கொண்டேயிருந்தார்கள். அவர்கள் பேச்சில் அனல்தான் வீசிற்று... அவர்கள் கண்ணீர்தான் அவர்களது துயரத்தை விளம்பரப்படுத்தியது. அவர்களது உடைந்த உள்ளங்கள் தான் பேசிக்கொண்டன. நேரம் ஆகிவிட்டதால் ஜெயில் வார்டன் அவளைப் போகும்படி கூறிவிட்டான்.

ஏகாம்பரத்தின் வாழ்வு வறண்ட பாலைவனமாக மாறிவிட்டது! அபாண்டமான பழி ஏற்பட்டதை எண்ணிச் சிறைக்கூடத்தைக் கண்ணீரால் நனைத்தான். அவன் உள்ளம், உடைந்த கண்ணாடி டம்ளர் போல் தூள் தூளாகப் போய்விட்டது. தன் குடும்பம் சிரழிந்த நிலையைக் கண்டும், தன் புதல்வனின் பரிதாபகரமான மரணத்தைப் பற்றியும், சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டது குறித்தும் எண்ணி எண்ணி அவன் மூளையே பைத்தியம் பிடித்துவிடும் நிலைக்கு மாறிவிட்டது!! அவன் ஓர் புது மனிதனாகவே மாறிவிட்டான்!!!

ஒரு மாதம் கழித்து அலமேலு சிறைக்கூடத்தை அடைந்தாள். அவள் முகத்தோற்றம் முன்போல் இல்லை; அமைதி குடிகொண்டிருந்ததுபோல் காணப்பட்டது. கணவன் அருகே வந்தாள். கணவருக்குப் புத்திமதிகூறினாள்! அவனையே ஒருசில நிமிடம் வரை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள்! ஏதேதோபேசிக்கொண்டிருந்தாள், மீண்டும் விடைபெற்றுக்கொண்டாள். கண்ணீர் பெருகக் கடைசியாக ஒருதடவை தன் கணவனைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டு, முந்தானையால் முகத்தை மூடிக்கொண்டு விம்மலுக்கிடையே "வருகிறேன்... அத்தான்...'' என்று கிளம்பியவள் தான் மீண்டும் சிறைவாசலை மிதிக்கவில்லை.

அவள் சென்ற மறுநாள் ஒரு கடிதம் ஏகாம்பரத்திற்கு வந்தது. ஆவலுடன் அதை வாங்கிப் படித்தான். அதில்:

அன்புள்ள அத்தானுக்கு,

வாழ்க்கையில் வெறுப்புக் கொண்ட அலமேலுதான், உள்ளக் கொதிப்பிலிருந்து ஊற்றெடுக்கும் என் பயங்கர மனம் தான் இதை எழுதுகிறது. என் வாழ்வின் ஒளி எங்கேயோ சென்று மறைந்துவிட்டது. அதைக் கண்டுபிடிக்கத்தான் போகின்றேன். தூரத்தே தெரியும் அந்த மலையருவிதான் எனக்கு வழிகாட்டி. நான் உங்களிடமிருந்து மனப்பூர்வமாக விடைபெற்றுக்கொள்கின்றேன். இந்தக் கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கும்போதே அருவியிலே இரண்டறக் கலந்திருப்பேன்! என் செய்கை பயங்கரமானதாக இருந்தால் என்னைக் கடைசி முறையாக மன்னித்து விடுங்கள். இவ்வளவு வேதனைகளுக்கும் இடையே வாழ்ந்து அணு அணுவாகச் சாவதைவிட, என்னுடைய இத்தகைய முடிவு நல்லதென்றே படுகிறது. மனமார நான் குற்றம் செய்திருந்தால் தாங்கள் என் ஆத்ம சாந்திக்காக மன்னித்துவிடுங்கள்...

வாழ்க்கையில் இன்பம் என்பதையே அறியாத
அபாக்கியவதி,
அலமேலு.

கடிதத்தைப் படித்தான் ஏகாம்பரம். தரையில் தடாரென்று விழுந்தான். அவன் வாய் அவனையறியாமலேயே "அலமேலு... நீ அழிந்தாவிட்டாய்'' என்றது. அந்த நேரத்தில் தூரத்தில் யாரோ "துன்பத்தின் எல்லை இதுதானோ'' என்று பாடுவதும் கணீரென்று சிறைச்சாலை பூராவும்கேட்டது. ✻

குழந்தை வளர்ப்புக்கலை

—[க. யோகநாதன்]—

கலைகளின் வகைகள் பல; அவற்றின் ஒரு பிரிவே குழந்தை வளர்ப்புக் கலை. மற்றக் கலைகளைக் கற்க எத்துணைத் திறமை வேண்டுமோ அத்துணைத் திறமை குழந்தை வளர்ப்புக் கலைக்கும் தேவை; நாட்டியக் கலையை எடுத்துக் கொள்வோம்; இக்கலையைப் பயிற்றுவிக்க — இக்கலையிற் தேர்ந்த— ஆசிரியர்கள் பலர் நம் நாட்டிலே உள்ளனர்; அவ்வாறே இக்கலையைக் கற்பிக்க நாட்டியக் கலை நிலையங்களும் உள்ளன; ஓர் ஒழுங்கு முறையில் இக்கலையைப் பயிலலாம்.

குழந்தை வளர்ப்புக் கலை இக்கலையினும் மாறுபட்டது; இக்கலையைப் பயிற்றுவிக்க ஆசிரியர்கள் கிடையாது; தாயும் தந்தையுமே குழந்தை வளர்ப்புக் கலைக்கு ஆசிரியராவார்கள்; அவர்கள் எந்த ஆசிரியரிடமோ, அன்றி எந்தக் கலைக்கூடத்திலோ சென்று இக்கலையைப் பயில்வதில்லை; இக்கலை தானே வருவது; பெற்றோர் தம் திறமையால் பெருகுவது. நம் நாட்டில் இக்கலையைப் பயிற்றுவிக்கும் கலைக்கூடங்கள் கிடையா; ஒவ்வொரு குடும்பமுமே இக்கலையைப் பயிற்றுவிக்கும் கலைக்கூடங்களாம்.

ஓவியக் கலையைச் சில கோடுகளுக்குள்ளே அடக்கிவிடலாம்; நாட்டியக்கலையை, அபிநயத்தின் மூலம் காட்டிவிடலாம்; நாடகக் கலையை, மேடையிலேறி நடித்துக் காட்டிவிடலாம்; பேச்சுக் கலையை நாவன்மையின் மூலம் புலப்படுத்திவிடலாம்; ஆனால் குழந்தை வளர்ப்புக்கலை ஒரு கோட்டினுள்ளே அடங்கிவிடக் கூடியதன்று.

“நூலைப்போல சேலை, தாயைப்போல சேய்” என்னும் பழமொழி நந்தம் தமிழ் நாட்டில் வழக்கிலுள்ளது. ‘சேலையின் மென்மை நூலின் மென்மையிலும். சேயின் தன்மை தாயின் தன்மையிலும் அடங்கியிருக்கின்றன’ என்னும் தத்துவத்தை இப்பழமொழியின் வாயிலாக நாம் உய்த்துணரலாம்.

கல்லூரி ஒன்றில் எவ்வாறு முதல்வர் ஒருவரும், அவருக்குத் துணைவர் ஒருவரும் இருப்பரோ, அவ்வண்ணமே குழந்தை வளர்ப்பிலும் முதல்வர் ஒருவரும், துணைவர் ஒருவரும் இருப்பர்; குழந்தை வளர்ப்புக் கலையில் முதல்வர் பொறுப்பைத் தாய்க்கும், துணைவர் பொறுப்பைத் தந்தைக்கும் ஒப்பிடலாம்.

மராட்டிய மாவீரன் சிவாஜியின் வீரத்திற்கு முழு முதற் காரணம் அவருடைய தாயாராகும். ஒவ்வொரு நாளும் சிவாஜிக்கு அவருடைய தாயார் வீரக் கதைகள் பல சொல்லுவார்களாம்! இஃது அச் சிறுவனின் உள்ளத்தில், வீரனாக விளங்கவேண்டும் என்னும் உறுதியை அளித்துள்ளது; அதன் பின்னரே அவன் தன்னுடைய முயற்சியினால் பெரு வீரனாய்த் திகழ்ந்தான்.

பண்டைய மறக்குல மங்கையர் தங்கள் மக்களுக்குப் பாலூட்டும் போது கூடவே வீரத்தையும் ஊட்டியுள்ளனர். எனவேதான் நம் தமிழ் நாட்டில் வாளெடுத்துப் போரிட்ட வீர மங்கையர் வாழ்ந்தனர்; புறநானூற்றுக் காட்சிகள் இவற்றை நமக்கு இனிக்க இனிக்கச் சொல்லும்.

தாய்மார்கள் தாலாட்டுப் பாட்டுப் பாடும்போதும், தம் மக்களுக்குக் கதைகள் சொல்லும்போதும் வீரஞ்செறிந்த கதைகளையே சொல்லவேண்டும். பண்டைய போர்க்களக் காட்சிகளைத் தாலாட்டுப் பாட்டுகளாக்கிச் சொல்லினர்; இதன் காரணமாய் வளரும் குழந்தைகள் வீரத்தோடு வளருகின்றன; இதை விடுத்து இன்றைய தாய்மார்கள், தம் மக்களைத் தாங்களே கோழைகளாக்கி விடுகின்றனர்.

குழந்தை சோறுண்ண மறுக்கின்றது; உடனே தாய் என்ன செய்கின்றாள்? “ஐந்து கண்ணனைக் கூப்பிடுவேன்; அதோ பார்! கொள்ளிவாய்ப் பிசாசு!” என்று கூறிச் சோறூட்டுகிறாள்; இவ்வாறு வளரும் குழந்தை, இருட்டைக் கண்டாலும், இரவில் எங்காவது சிறு ஒளியைக் கண்டாலும் பயப்படுகின்றது. இம்முறையில் வளருங் குழந்தைகளின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்பதை ஊகித்தறிக.

நாய்களைக் கூட்டிச் சென்று மான் வேட்டையாடுவோர், மானை இறுதிவரை ஓட ஓட விரட்டிக் களைப்புறச் செய்து இறுதியில் மிகவும் சுலபமாகப் பிடிப்பர்; மீன் பிடிப்போர் தூண்டிலில் பெரிய மீன் அகப்பட்டுக் கொண்டவுடன் ஆத்திரப்பட்டால் என்னவாகும்? மீன் இழுக்க இழுக்கத் தூண்டிலை விட்டு, இறுதியில்தான் மீனைத் தம் வழிக்குக் கொணர்வர்; இந்தக் கொள்கையையேதான் குழந்தை வளர்ப்பிலும் கடைப்பிடித்தல் வேண்டும்.

“அடியாத மாடு படியாது” ‘அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவமாட்டான்’ என்னும் பழமொழிகளைக் கடைப்பிடித்து எடுத்ததற்கெல்லாம் குழந்தையை அடித்து வளர்ப்பது, குழந்தையின் எதிர்காலத்திற்கு ஊறு செய்வதாகும்! இவ்வாறு வளருங் குழந்தை எதிர்காலத்தில் ஒன்று கோழையாகப் போகும்; அல்லது போக்கிரியாக மாறும்.

இளவயதில் சிறுவர்களின் உள்ளத்தில் அன்பு, ஈகை, வீரம் முதலியவை வளரும் முறையில் பெற்றோர்கள் வித்திடல் வேண்டும். அன்பாய் இருப்பதெப்படி, அன்பு வழி வாழ்ந்ததால் உயர்ந்தோரின்

(11-ம் பக்கம் பார்க்க)

உறுதிகொள்வோம்

—பழநி—

தென்னவன்

மலர் மணத்தைத் தருகின்றது. தென்றல் இனிமையைத் தருகின்றது. தேன் நிலவு தண்ணொளியையும் இன்பத்தையும் கொடுக்கின்றது. அதுபோல் உள்ளம் உயரிய எண்ணத்தைத் தருகின்றது.

உயரிய எண்ணம் என ஏன் கூறினோம் என்றால், எண்ணம் தான் உலகை ஆளுகின்றது! எண்ணம்தான் இன்று உலகை அச்சத்தால் ஆட்டவும் செய்கின்றது. எண்ணம்தான தனி மனிதனை உயர்த்துகின்றது. அதே எண்ணம்தான் அவனைத் தாழ்த்தியும் விடுகின்றது! எப்படி?

"மனம்போல் வாழ்வு" என்றனரே நமது முன்னோர். அதன் கருத்தென்ன? நம் உள்ளம் எவ்வாறு எண்ணுகின்றதோ அதைப் போலவே வாழ்வும் அமையும் என்பதுதானே!

இன்று உலகினை ஆளும் உத்தமர்கள்—உயர்ந்த நல்லறிஞர்கள்—சிந்தித்துச் செயலாற்றுவபோல், ஊரைக் கெடுக்கும் சில கயவர்களும் சிந்தித்துத்தானே, தங்களது செயலைத் துவக்குகின்றனர்.

இன்று நாம் காணும், வானொலியும், வான ஊர்தியும், புகை வண்டியும் மின்சாரமும், படக் காட்சியும், இன்னபிறவும் மார்கோனி, ரைட் சகோதரர், தாமஸ் ஆல்வா போன்ற எண்ணற்ற விஞ்ஞானிகளின் எண்ணத்தின் மறு உருவம் என்றால் மிகையல்லவே!

இத்தகைய உயர்ந்த சிந்தனையென்பது யாது? அது எண்ணத்தின் வளர்ச்சிதானே! உள்ளம் எவ்வாறு எண்ணத்தைப் படைக்கின்றதோ அதுபோலவே எண்ணம் சிந்தனையைப் படைக்கின்றது!

வண்ணமாளிகை உண்டாக்க எப்படிக் கெட்டியான அடிப்படை தேவையோ, அதைப்போல வினைச் செயல்கள் நிகழ்த்த எண்ணமும் முக்கியம்.

ஒருவன் சரியான முறையில் எண்ணிச் செய்யாத செயல், பித்தன் ஒருவன் செய்யும் செயலினையே ஒக்கும்! பித்தனை இவ்வுலகம் ஒரு பொருட்டாகக் கொள்ளுமா? இதையேதான் வள்ளுவப் பெருந்தகையும்;

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு"

என்று கூறினார்.

இத்தகைய எண்ணம்தான் சிறந்த எழுத்துக்களையும் தருகின்றது! எண்ணத்துடன் பிறக்கும் அந்த எழுத்துக்கள் தனி வரி வடிவம் மாத்திரமல்ல. அவை வல்லாரின் உள்ளத்திலிருந்து தோன்றுவதால்—வாள் முனை சாதிக்காததைச் சாதிக்கும் வல்லமை உடைய மாபெரும் சக்தித் திரளாகும்.

அவைதோற்றுவிப்பவர் தம்உள்ளப் பாங்கினைப் பொறுத்து மனிதனை மிருகமாகவும் மாற்றும்—அல்லது மனிதனாகவே வாழவும் வைக்கும். அவனைக் கொலைகாரனாகவும் மாற்றும்—அதே எழுத்து அவனைச் சான்றோனாகவும் மாற்றும். கொடுமைகள் பல செய்யும் தீயவனைத் தோற்றுவிக்கும் எழுத்தே, எல்லோருக்கும் உதவும் ஊருணி நீர் போன்ற சமுதாயத் தொண்டனையும் உருவாக்கும்!

ஆம், நல்லவர் எழுதியவை நன்மையையும், தீயவர் எழுயவை தீமையையும் தரும்.

காகிதப்பூ மணக்காது. காட்டாறு பயன் தராது. அதுபோல் நீதி நூல்களைக் கற்றுத் தெளியாத உள்ளமும் நல்ல உள்ளமாக — மக்கட்குப் பயன்படும் உள்ளமாக— இருக்கமுடியாது!

ஆகவே, உடலுக்கும்உயிருக்கும் உள்ள உறவினைப் போன்றது— எண்ணத்திற்கும் எழுத்திற்கும் உள்ள உறவு. நல்ல மலருக்கும் சுவைமிகு மணத்திற்கும் இருக்கும் உறவினைப்போன்றது—எண்ணத்திற்கும் எழுத்திற்கும் உள்ள உறவு.

உடல் இல்லையென்றால் உயிர் இல்லை. வண்ணமலர் இல்லையென்றால் வளமிகு மணமும் இல்லை. அதுபோல் எண்ணம் இல்லையென்றால் உயிரோட்டமுள்ள எழுத்துக்களும் இல்லை, இல்லை.

இத்தகைய எண்ணத்தையும் எழுத்தையும் தமிழர்களாகிய நாம் எவ்வாறு பயன்படுத்தவேண்டும்? வடநாட்டாரிடம் அடிமைப்பட்டு, வளமில்லா வாழ்வு வாழும் நாம் எவ்வாறு பயன்படுத்தவேண்டும்? தொழில்செய்யப் போதிய கனிவளம் இருந்தும், தொழில்செய்ய வாய்ப்பற்ற ஏழைகளாய் — எடுப்பார் கைப் பிள்ளைகள்போல் — ஏமாளிகளாய் வாழும் நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? ஒரு மணங்கு மிளகாய் ஏற்றுமதியைக் கூட, ஏற்றுமதியாகாமல் கட்டுப்படுத்த வடநாட்டு அரசிடம்

காவடி தூக்கிச்செல்வதுபோல், எடுத்ததற்கெல்லாம் வடக்கு நோக்கியே தெண்டனிட்டு, வாழ வழி கேட்டு, வழியும் வகையும் கிடைக்காமல் ஏமாந்து நிற்கும் நாம் நமது எண்ணத்தையும் எழுத்தையும் எப்படிப் பயன்படுத்த வேண்டும்? அதுதான் இன்று நம் முன்னுள்ள வினா?

அந்த வினாவிற்கு முடிவுகாண இன்று ஒரு சிறிய உறுதி எடுத்துக் கொண்டால் — பள்ளத்தில் தள்ளப்பட்டு, பாழ்பட்டுக் கிடக்கும் நம் வாழ்வு செழிக்கும். அம்முடிவு என்ன? அந்த உறுதி எது?

கொள்கையுடையவன்தான் மனிதன். கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இலட்சிய வாழ்வு தான் சிறந்த வாழ்வு! கொள்கையற்றவன் வாழ்வு கரையில்லா நீர்நிலை போன்றதுதான். சுருக்கமாகச் சொன்னால் கொள்கையற்றவன் மனிதனல்ல; ஆம், அவனுக்கும் உணவைத் தேடி உண்டு பிழைத்து உறங்கும்உயிர்ப்பிராணிக்கும் வேறுபாடு கிடையாது.

ஆகவே, நாம்நமதுஎண்ணத்தை நம் அருமை மொழி, நாடு, இனம் வாழப் பயன்படுத்தவேண்டும். அவை புதுவாழ்வு பெறுவதற்கான சூழ்நிலையை உருவாக்க நாம் நமது எண்ணத்தையும் எழுத்தையும் பயன்படுத்தல் வேண்டும்!— பயன்படுத்துவோம்—என்று நாம் இன்று உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்! நமது மொழி, நாடு, இனம் தழைப்பதற்கான உழைப்பைச் செலுத்துதற்கான காரணங்களை நாம் எல்லோரும் அறிந்திருப்போமாயினும், அவற்றை மறந்திருப்போம். அவற்றை இச்சமயத்தில் நினைவுபடுத்திக் கொள்ளுதல் மிகமிக இன்றியமையாதது. இதோ:-

தமிழ்மொழி

தமிழுக்கு இன்று பல வழிகளிலும் இழிவு ஏற்பட்டிருக்கின்றது. நம் அடிமை வாழ்வு நிலைபெற்றால் இன்னும் தொடர்ந்து பல இழிவுகள் ஏற்படலாம்.

தமிழனுக்காக முழங்கும் வானொலியில் தமிழன் ஆட்சி நடாத்தும் எல்லையில் அவனது மேற்பார்வையில் இயங்கும் வானொலியில் — வானொலி எனும் தேனொலித் தமிழ்ச்சொல் இன்னும் வழங்கப்படவில்லை. இதற்காகத் தமிழ் மக்கள் நடத்திய போராட்டங்களும் ஊராட்சிமன்றங்கள் அனைத்தும் நிறைவேற்றியனுப்பிய தீர்மானங்களும் வீணாய்விட்டன. வட அரசால் அவை மதிக்கப்படவில்லை.

தமிழ் மகன் தன் உடைமையை விற்று, தன் பசியை வைராக்கியத்தாலேயே போக்கிவிட்டு, மிச்சப்படுத்திக் கட்டிய வரிப்பணத்தால் போடப்பட்டுள்ள சாலையின்,தொலைவினைக் காட்டும் கற்களில் நேற்று வந்து குடிபுகுந்துள்ளது வேற்று மொழி. அதுபோலவே ஊர்க் கிராம அதிகாரியின் கணக்கு ஏட்டிலும் அம்மொழி புகுந்திருக்கின்றது—யாருக்கும் தெரியாமல்.

இதை ஊராளும் அமைச்சர்களும் பார்த்து, வயிறு எரிந்து, புலம்பியிருக்கின்றனர். என்றாலும் அவர்கள் புலம்பல் வினாக்குறியாக மாறவில்லை. இதையுப் நாம் பார்த்துக் கொண்டு சொரணையற்ற வாழ்வு வாழுகின்றோம். சிந்திக்கவேண்டாமா?

நாம் கொடுக்கும் காசால் நிலைபெற்றிருக்கும் புகைவண்டி நிலையம், அஞ்சல் நிலையம் போன்ற இடங்களில், தமிழ் ஆட்சிசெலுத்தவில்லை.

வடநாட்டுப் பல்கலைக் கழகங்களில் தென்னக மொழி கற்பிக்க ஏற்பாடு செய்யாத வடவரசு தென்னகத்தில் இந்தி படிப்போருக்கு உதவித்தொகையெனப் பல இலட்சங்களைப் பாழ்படுத்துகின்றது. தங்கட்குத் தீனி கிடைக்கின்றதெனச் சிலர் இந்தியும் படிக்கின்றனர். தமிழையும் பழிக்கின்றனர். இந்நிலையை மாற்ற முனைந்தோமா?

மொழிதான் இப்படியென்றால் நாட்டைப் பார்ப்போம்.

தமிழ் நாடு

இந்திய அரசு ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டுதற்கு முன்னரே சேலத்தில் இரும்பும் பாக்சைட்டும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது நாடறிந்த உண்மையென்பதோடு, வடவரும்நன்கறிந்த உண்மையாகும்.

என்றாலும் இங்கு இரும்புத் தொழிற்சாலையோ, அலுமினியத் தொழிற்சாலையோ இன்றுவரை ஏற்படுத்தப்படவில்லை.

ஆனால்...?

வடக்கில் மூன்று பெரிய இரும்புத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பம்பாயில், உத்சிர் எனுமிடத்தில் பார்க்சைட் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதைப்பயன்படுத்தி ரூ. 20 கோடி முதல் 25 கோடிவரை செலவிட்டு, கொய்னாநீர் மின்சாரத் திட்டப் பகுதியில் ஒரு அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்தப்படுகின்றது என வாங்கதே என்ற மந்திரி 1—8—59ல் அறிவித்திருக்கிறார்.

உத்தரப்பிரதேசத்தில் ரிகண்ட் அணைக்கருகில் 3 கோடி டாலர் செலவில் ஒரு அலுமினியத் தொழிற்சாலையை அமெரிக்காவும் பிர்லாவும் துவக்கியிருக்கின்றனர். ஆனால் சேலம் பாக்சைட் முன்னாலேயே கண்டுபிடிக்கப்பட்டது. அதற்குப் பட்டைநாமம்தான் பதில்.

இந்தியாவிலேயே சென்னைதான் மின்சார உற்பத்தியிலும், அதைக் கிராமங்கட்குப் பங்கிட்டுக் கொடுப்பதிலும் முதலில் நிற்கின்றது. ஆனால் மின்சாரக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலைகள் இரண்டு 90 கோடி செலவில் போபாலிலும் இன்னொரு இடத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பார்த்தீர்களா

* எண்.	ஊர்	செலவுத் தொகை	உற்பத்தியளவு ஆண்டுக்கு
1.	ரூர்கேலா	170 கோடி	10 இலட்சம் டன்
2.	பிலாய்	131 கோடி	10 இலட்சம் டன் எஃகு 10 இலட்சம் டன் பிற இரும்பு
3.	துர்காபூர்	138 கோடி	7,50,000 டன் எஃகு, 3,50,000 டன் தேன் இரும்பு.
4.	டாடா நிறுவனம் நான்காவது இரும்பாலையை நிறுவத்திட்டங்களை முடித்துவிட்டது. இதற்கு மத்திய அரசும் இணங்கிவிட்டது.		

வேடிக்கையை! தென்னாடு என்ன வடநாட்டாருக்கு வணிகச் சந்தையா? இதுதான் ஏக இந்தியாவா?

காவேரிப் படுகையில் உள்ள எண்ணெயைத் தோண்டி எடுக்க முயற்சி செய்யக்கூட மறுக்கும் மத்திய அரசு, வடக்கில் பம்பாய், பீகார், அசாம் மாநிலங்களில் பன்னூறு கோடியில் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையை ஏற்படுத்துகின்றது!

தமிழகம்தான், இன்சூரன்சு கழகத்திற்கு அதிக உறுப்பினர்களைச் சேர்த்திருக்கின்றது. ஆனால் அக்கழகத்தின் நிதியைப் பிரித்துக் கொடுக்கும்போது, தமிழகத்திற்குத்தான் குறைவாக மிக மிகக் குறைவாகப் பிரித்துக் கொடுத்திருக்கின்றனர்.

56—57-ல் தொழில் முயற்சிக்காக 69·14 கோடி பிரித்துக் கொடுக்கப்பட்டது. அதில்,

பம்பாய்க்கு 25·87 கோடி.
வங்கத்திற்கு 23·17 „
தமிழகத்திற்கு 2·43. கோடி.

மீதி...பீஹாருக்கு.—இத்தகைய புள்ளி விவரங்களைப் படிக்கும் உங்களது உள்ளம் எப்படிக் கொதிக்கின்றது? நம் தமிழகம் என்ன போககற்றதா? அல்லது இங்குள்ளோர் ஏமாளிகளா? ஏன் இந்த ஓரவஞ்சக நிலை? நாம் இது குறித்து எண்ணவேண்டாமா? இந்த மாற்றாந்தாய் மனப்போக்கை மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டாமா?

இனித் தமிழினத்தைப் பார்ப்போம்!

தமிழ் இனம்

நம் தமிழ் இனம் இன்று இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் — தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளிலிருந்து. அவர்களது உடமையையும், உயிரையும் பறித்துக்கொண்டு விரட்டியடிக்கப்படுகின்றது. "இது குறித்து நடவடிக்கை எடுங்கள்" என்று நாம் கேட்டால் நேரு அவர்கள், 'இது அந்த நாட்டு உள் விவகாரம். நாம் தலையிட முடியாது' என்று கூறி விடுகின்றார். ஆனால்...?

வடநாட்டு அகதிகளைக் கவனிக்கத் தன் மந்திரி சபையில் தனியாக ஒரு மந்திரியையே நியமித்துள்ளார் — நேரு. அவர் இன்றுவரை வட அகதிகளுக்கு ரூ. 200 கோடி வரை செலவும் செய்திருக்கின்றார். இங்கு இலங்கையிலிருந்து வந்த தமிழ் அகதி, வறுமை தாங்க முடியாமல் தற்கொலை செய்கிறான். நீதி எங்கே இருக்கிறது? ஏன் இந்த வஞ்சகத் தன்மை—வட நாட்டரசுக்கு?

தங்கள் மொழியும் இனமும், நாடும் பழிவாங்கப்பட்டால், அதை ஒரு வங்காளியோ, அன்றிப் பஞ்சாபியோ அல்லது மராட்டிய வீரரோ—குசராத்தியரோ அல்லது வேறு ஒரு இனத்தவரோ பார்த்துக் கொண்டா இருப்பார்கள்?

இரண்டாண்டுகட்கு முன் ஒன்றாக இணைக்கப்பட்ட பம்பாய் இன்று இரண்டாகப் பிரிக்கப்படுகின்றதே — மத்திய அரசால். அதற்குக் காரணம் என்ன? சிந்தியுங்கள்.

நாமும் தமிழர் என இங்கு வாழுகின்றோம். நமக்குச் சோறுதானா முக்கியம்? நம் எண்ணம் வெறும் எண்ணமாகத்தானா இருக்கவேண்டும்? நாம் இவ்வுலகில் வாழும் நாள் எத்தனை கோடி? அவ்வாறிருக்க நம்சாவு நம் இனத்திற்காக, மொழிக்காக, நாட்டிற்காக ஏன் பயன்படக்கூடாது?

எதிர்காலத்துத் தமிழ் இளைஞர்களே! பேராற்றல் படைத்த அறிஞர் பெருமக்களே! சொல்வன்மைமிக்க பேராசிரியர்களே ஊக்கமுடைத் தொழிலாளர்களே! வைர நெஞ்சுடைத் தாய்மார்களே! உங்கள் குடும்பத்தைப்பற்றியும், உங்கள் முன்னேற்றத்தைப்பற்றியும் சிந்திக்கும் சிந்தனையில் — எண்ணும் எண்ணத்தில்—ஒரு பகுதியை நாடு, இனம் மொழிக்காகச் செலவிடுங்கள்! அதிலும் எழுத வாய்ப்புள்ளவர்கள் எழுதுங்கள். ஓயாது எழுதுங்கள்! கைவலிக்கும் வரை எழுதுங்கள்! எண்ணம் எழுத்தாகி, எழுத்துச் செயலாக மாறினால் வெற்றி நம்பக்கம்தான். உறுதியாய் எண்ணுங்கள் — எழுதுங்கள்! நமது எண்ணமும் எழுத்தும் நாட்டு விடுதலைக்காகப் பயன்படட்டும்! வாழ்க திராவிடம்! வெல்க நம் முயற்சி!

★

8-ம் பக்கத் தொடர்ச்சி

உண்மை வரலாறு, கலையிற் சிறந்தோரின் தன்மையால் அவர்கள் உயர்ந்த விதம், வீரத்தின் பெருமை முதலியவற்றை ஒழுங்காய்த் தம் மக்களுக்குப் பெற்றோர் செப்பிடல் வேண்டும்.

மேலை நாட்டார், தாங்களும் ஒழுங்கோடியைந்த வாழ்க்கையை மேற்கொண்டு, தம்முடைய மக்களும் அவ்வாழ்க்கையை மேற்கொள்ள நடைமுறையில் பயிற்றுவிக்கின்றனர். இதன் காரணமாய் அவர்கள் தங்கள் நாட்டுக்குப் பண்பாடு மிளிர்ந்த நற்குழந்தைகளை அளிக்கின்றனர். இதே முறையில் நம் நாட்டுத் தாய்மார்களும், தந்தைமார்களும் நடந்து கொண்டால், நம் நாட்டின் எதிர்காலம் நல்ல முறையில் அமையும். வாழையடி வாழையாகப் பெற்றோர்கள் நல்லொழுக்கம் மிளிர்ந்த நாட்டுச் செல்வங்களை எதிர்காலச் சிற்பிகளை — அனுப்புதல் வேண்டுக்.

ஒவ்வொரு ஆணும் பெண்ணும் குழந்தை வளர்ப்புக் கலையினைபபற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்; இக்கலை சொல்லித் தெரிவதில்லை; தானே வருவது; தானே வரும் அக்கலையை ஒழுங்குபடுத்துவது தான் பெற்றோரின் கடமையாகும்.

★

"திராவிடநாடு"
பொங்கல் மலர்
சி. என். ஏ.
அளிக்கும்
கதைகள்! கட்டுரைகள்!!
கற்பனை ஓவியங்கள்!!
அழகுமிளிரும் வகையில்!!
அறிவு மணக்கும்
முறையில்!!
வெளிவருகிறது.
விலை ரூ. 1-00
நிர்வாகி.

ஒன்றில் இரண்டு!

—(இளந்தமிழன்)—

இன்றுவரை—

நல்லவனை வாழ விட்டதில்லை சமுகம்! தெளிவான கொள்கையுடையவன் தொல்லை பலவற்றிற்கு ஆளாவது கண்கூடு! பண்போடு வாழலாம் என்று ஆசைப்படுபவன் பரிதாபத்திற்குள்ளாவது நடப்பு! நல்லவற்றை நிலைநாட்ட ஒருவன் முன்வரும்போது, அவனை முன்னேறவொட்டாமல் தடைக்கல் போட்டு வருகிறது சமுகம்!

எனினும் நல்லவர்கள் அழிவதில்லை! சிறந்த கொள்கைகள் செத்தொழிவதுமில்லை!

முறபகல் செய்த பிழையினைப் பிற்பகல் அதைச் செய்தவனே உணர்ந்து திருந்துகிறான். உலக நடப்புக்கள் இவை!

தான் மட்டும் உண்டு தழைத்து வாழ்வது மனித வாழ்வல்ல என்று நினைத்தது தவறா? தமிழ் வளரவேண்டும் என்று எண்ணியது கெட்டதா? தமிழ்ப் புலவர்களையும் பாணர்களையும் பரிசில் அளித்துப் பாராட்டியது செய்யக் கூடாத குற்றமா?

"குற்றம்" என்றுதான் நினைத்தான் ஒருவன்! 'அண்ணன் சொல்லுவது அநீதி' என்று அவனை எண்ண வைத்துவிட்டார்கள், அவனைச் சுற்றி இருந்த சோற்றுப் படையினர். 'அரச குலத்திற்கே உரித்தான செல்வங்கள் வாரி இறைக்கப்படலாமா? பலருக்கும் சொந்தமான பணத்தை வாரிக் கொடுத்து ஒருவன் மட்டும் சிறந்த வள்ளல் என்று பாராட்டப் பெறுவது நியாயமாகுமா? கூடாது... கூடாது ... அப்படிப்பட்டவனை இனியும் அரசிருக்கையில் அனுமதிப்பது தவறல்லவோ?' எனறு புரட்சிக்கொடி உயர்த்தியது, மனிதனுய்ப் பிறந்துவிட்ட ஓர் உயிர்ப் பிண்டம்!

விளைவு: விலங்குகள் பல வாழும் காடு, குமணப் பெருவள்ளலுக்கு விடானது! 'அருமை'த் தம்பியின் அடாத செயலின் கொடிய வினை இது!

நல்லவன் நாட்டு மக்களிடம் இருந்து பிரிக்கப்பட்டான். நல்லவர்கள் எல்லோரும் அழுதனர். நாடே அழுதது! "குமணன் நாட்டைவிட்டுக் காட்டிற்குச் செல்வதா?" என்று கேள்விகேட்டு. 'அதற்கு காரணம் யார்? எங்கே அவன்?' என்று வெறிகொண்டு ஓடினர் மக்கள்!

அன்பு உள்ளம் கண்ணீர் வடித்தது. "அமைதி — அமைதி" என்று அல்லலுறும் அவனுடைய வாய் அசைந்தது. மக்கள், உடலைத் தங்களுடன் வைத்துக்கொண்டு, உயிரை அவனுடன் அனுப்பி வைத்தனர்!

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் மக்களின் இடையில் வாழ்வதைக் காட்டிலும், கள்ளமின்றி வாழும் காட்டுப் பறவைகளின் இடமே மேல்" என்று எண்ணினன் குமணன்!

பூக்காட்டிலே அமைந்த குடில் ஒன்று அவனுடைய இருப்பிடமாய் அமைந்தது. உலகம் எல்லாம் அதுவே ஆயிற்று குமணனுக்கு! உலகத்து இன்பங்களை எல்லாம் துய்க்கும் வாய்ப்பு அற்றுப்போய் விட்டதே என்று ஏங்கினனோ அவன்? இல்லை! 'செந்தமிழ் இருக்க இனிமைதரும் பொருளொன்றும் உண்டோ உலகில்?" என்று வினவினன்!

மாலையிலே குயில் கூவியபோது பாவலர்கள் எதிரே இருப்பது போன்று மகிழ்ந்தான். மான்கள் மருண்டு ஓடியபோது மங்கை நல்லவர்களின் இடையே இருப்பது போன்ற உணர்வு கொண்டான்!

துன்பங்களை எல்லாம் இன்பங்களாகக் கொண்டு செருக்கி வாழ்ந்த குமணனுக்கு ஒரே ஒரு குறை மட்டும் தீராததாயிற்று! என்ன குறை தெரியுமா? "கொடு என்று கேட்க ஆள் இல்லை'— எடுத்துக் கொடுக்கப் பொருள் இல்லை!—இப்படியும் நிலை வந்ததே!" என்ற குறைதான்!

"மென் தமிழே எங்கள் மெய்" என்று வாழ்ந்துகொண்டிருந்த தமிழ்ப் புலவர்களின் வழித்தோன்றல் பெருந்தலைச் சாத்தனார் இச் செய்தியை அறிந்தார்!

கிளர்ந்தெழும் அரிமா தோற்றது அவரிடம்! "யார் செய்த பணி இது? பண்பின் சிகரத்தைத் துன்பத்திற்குள்ளாக்கியது யார்?" என்று கனன்றது அவர் நெஞ்சம்!

அவனுடைய சிறுமதியைப் பாட்டாகப் பொழிந்து தள்ளியது அவர் வாய்! "குமணன் உடன் பிறக்கத் தகுதி அற்றவன் அவன்! பேதைக்கு நல்லது எது என்று தெரியாமல் போய்விட்டது போலும்" என்று பெருமுழக்கம் செய்தார் சாத்தனார்!

"அட அறிவிலி,' அண்ணா, எனக்கு உன் இடத்தைத் தா" என்று கேட்டிருந்தாலே கொடுத்திருப்பானே, அவனையா இப்படி இழித்து நடத்திவிட்டாய்?

அதுவும் போதாதென்று அவன் தலையை வேறு கேட்டிருக்கிறாய்! நன்று—நன்று! அழிவின் எல்லையைத் தாண்டும் தருணம் உனக்குக் கிட்டிவிட்டது!

புரட்சிசெய்து மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் புன்மை குமண

னிடம் இல்லை என்பதைத் தெரியாதவனா நீ? என்று மனம் கொதித்தார்!

"புலவர் பெரும! உண்மையில் என் கொடைத் தன்மையை அதிகப்படுத்தியவன் என் தம்பியே! உலகில் வள்ளல்கள் பலர் வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் அனைவரும் உயிருடன் இருந்தபோது தான் கொடுத்து மகிழ்ந்தனரே தவிர, உயிர்விடும் காலையிலும் கொடுத்துச் செத்தாரில்லை. எனக்கு அந்தப்பேறு கிடைத்துள்ளது! அதற்குக் காரணம் என் இளவல்! இந்தாருங்கள் வாள்! இதோ என் தலை!—வெட்டி எடுத்துச்சென்று, காட்டுங்கள் என் தம்பியிடம் — அவன் கொடுக்கும் பணம்கொண்டு ஓட்டுங்கள் உங்கள் வறுமையை'' என்றான் குமணன்!

புலவர் வெடவடத்து நின்றார் அதைக்கேட்டு! நொடிநேரம் தாமதித்துவிடினும் 'எங்கே அவனே தன் தலையைக் கொய்துகொள்ளப் போகிறானோ' என்று பயந்து விரைந்து பிடுங்கினார் வாளை!

அவர் கண்களில் நீர் அருவியெனப் பெருக்கெடுத்து ஓடியது! 'குமணனே உனக்கா இந்த நிலை?' என்று அவனை அணைத்தவாறே தேம்பித் தேம்பி அழுதார்!

திடீரென்று புலவருடைய முகத்தில் ஒளி பளிச்சிட்டது! 'விரைவில் வருவேன்' என்று கூறிவிட்டுக் காற்றினும் கடுகிக் குமணனின் இருப்பிடத்தைவிட்டு அகன்றார்!

'அரசுக்கட்டில் ஆடுவதுபோன்ற உணர்வு ஏற்பட்டது' அவனுக்கு! எதிரில் அமர்ந்து இருந்த அவைக்களத்துப் பெருமக்கள் சுழன்று வருவதுபோன்று அவன் கண்களுக்குத் தென்பட்டது! மதிமயங்கியது! கைகள் சில்லிட்டன! "என்ன? கையில் வாளுடன் ஒரு புலவரா?''

வாயிற்காப்போன் கூறிச்சென்ற மொழி இளங்குமணனைக் கலக்கி அடித்தது!

'உண்மையிலேயே நான் கட்டளை இட்டவாறே நடந்து விட்டதோ?'' என்று துடித்தான்!

புலவர் பெருமகனார் சாத்தனார், பீடுநடைபோட்டு அவையை அடைந்தார்! ஓடிச்சென்று வரவேற்று இருக்கைதந்து அமர்த்தினான் புலவரை!

''புலவீர்! இது என்ன கத்தி தங்கள் கையில்? யாது சேதியோ?'' என்று வெடவெடக்கக் கேட்டான் இளங்குமணன்!

புலவர் அமைதியாகச் சிரித்தார்!

இந்தச்சிரிப்பு அவன் நாடிநரம்புகளை ஒவ்வொன்றாகத் தட்டியது!

இளங்குமணன் அலறினான்.

"விரைந்து சொல்லுங்கள் என்ன சேதி. எனக்கொன்றும் விளங்கவில்லை...'' என்று அரற்றினான்.

"தங்கள் ஆணை நிறைவேறும் காலம் வெகுதொலைவில் இல்லை அரசே! அந்தப்பேறு அடியேனுக்குக் கிடைக்க இருக்கிறது! செய்தி இதுவே! சொல்லிப் போகவே வந்தேன்!'' என்று கூறிவிட்டு அவன் முகத்தைப் பார்த்தார்!

புலவரது மொழிகேட்டான்! தலைசுற்றியது அவனுக்கு! 'அண்ணன் தலைக்கு விலை கூறிய கயவனே' என்று அவன் உள்மனம் சாடியது! கண்களில் நீர் பெருக்கெடுத்தது! புலவரது முகத்தை எதிர்கொண்டு நோக்கும் வன்மை இழந்தன அவன் கண்கள்! நாக்கில் நீர்வற்றிப்போய்ப் பேசமுடியாதவன் ஆனான் மன்னன்!

புலவர், எது நடக்கும் என்று எதிர்பார்த்தாரோ அது இனிதே நிறைவேறிவிட்டது! தீய சுற்றத்தவரால் மாற்றப்பட்ட அவன் மனது எளிதில் மாறக்கூடியது அல்லவோ? அவர், 'உளநூல் அறிவு' வெற்றிபெற்றுவிட்டது. தன் உடன்பிறந்தவனைக் கொல்லக் கட்டளை இட்டது எவ்வளவு அறியாமை?' என்று அவனை எண்ணிப்பார்க்கச் செய்துவிட்டார் புலவர்!

புலவர்மாட்டு ஓடிவந்து, குழந்தை போன்று கேவிக்கேவி அழுதான் இளங்குமணன். 'பெரியீர்! என்னை மன்னியுங்கள்! மண்மூடிக்கிடந்த என் அறிவுக்கு ஓர் அடிகொடுத்துக் காத்தீர்கள்!' என்று உருகினான்!

புலவரும் இளங்குமணனும் புறப்பட்டனர் வள்ளலைப் பார்க்க! உடன் புறப்பட்டது பெரும் படை!

கல்லும் முள்ளும் நிரம்பி வழிந்த காடு பின்னடைந்தது. அத்தனை வழியையும் அழாதே கடந்தான் இளங்குமணன்!

அண்ணனைக் கண்டதும் நாணிக், குழந்தைபோல் ஒதுங்கி நின்றான் பேதை! குற்றம் செய்யத் தூண்டியவன் கூனிக் குறுகி நிற்பதைக் கண்டு வியந்து நோக்கி, ஓடிவந்து, 'தம்பி' என்று தழுவிக் கொண்டான் வள்ளல் பெருமகன்!

''அண்ணா'' அறியாமல் செய்த பிழையை மன்னியுங்கள்'' என்று கூறியவாறே அண்ணனின் காலடியில் வீழ்ந்தான் தம்பி.

தம்பியின் மாற்றம், தரணியாண்ட குமணனின் கலை உள்ளத்தில் சொல்லொணாத களிப்பை ஏற்படுத்தியது! மக்கள் முகத்தில் எல்லாம் மகிழ்ச்சி கொப்பளித்து ஓடியது! காணற்கரிய காட்சி ஒன்றைக் கண்டுவிட்டதாக அவர்கள் கண்கள் பறை சாற்றிக் கொண்டிருந்தன!

"கொடை மன்னன் குமணன் வாழ்க''—'தமிழண்ணல் சாத்தன் வாழ்க' என்ற வாழ்த்து முழக்கங்கள் கானகத்தைக் கிடு கிடுக்க வைத்தன!

வறுமையை ஓட்டக் குமணனை நாடிவந்தார் பெருந்தலைச் சாத்தனார்! ஆனால் அவருடைய அறிவின் கூர்மை, வறுமையையும் ஓட்டிற்று—பிணக்கையும் தீர்த்து வைத்தது!

"எறிந்த கல் ஒன்று! விழுந்த கனிகள் இரண்டு!''

★

பெரியவர்கள் குழந்தைகளை அதிகமாகக் கண்காணிப்பது, நடைமுறையில் சாத்தியமில்லாத புத்திமதிகளைக் கூறுவது, அடிப்பது முதலியவற்றைக் கைவிட வேண்டும். இவைகள் அவர்களுடைய வாழ்வில் இடையூறு உண்டுபண்ணுவதல்லாமல், அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகவும் இருக்கின்றன.

சிறுவனும் சிரித்தான்!

ஆசிரியர் சொல்லியதை மனதில் நிறுத்தி, அன்று என்னவோ அதிகாலையிலேயே படித்துக் கொண்டிருக்கிறான் மணிமுடி. ஆசையோடு வளர்க்கும் அவனது தாய் அங்கு வருகிறாள்:

"மணிமுடி! பொழுது உதயமான உடனே படிக்கத் துவங்கிவிட்டாயே!"

"ஆம் அம்மா, காலையில் படித்தால் கருத்தில் பதியுமாம். இளமையிற் கற்பது என்றும் மறக்காதாம்; அப்படின்னு நமது ஆசிரியர் சொன்னார். அதனால் இனிக் காலையிலேயே படிக்கணும்."

"ஆமாண்டா கண்ணு, படித்து நல்லா முன்னுக்கு வரவேண்டும். நல்ல புலமையடைந்து நாட்டுக்குப் பயன் தரும் நூல் இயற்றிப் புலவரும் வியப்புற மன்னனும் மகிழ்வுற, தெள்ளுதமிழ் கற்றுத் தென்னகத்துப் பெருமைகளை உலகெல்லாம் மிளிரச்செய்ய வேண்டும்."

"அம்மா உனது ஆசியிருந்தால் மாசற்ற தமிழ்ப் புலவன், மகத்தான எழுத்தாளன் என்று மன்னனும் புகழும்படி திகழ்வது ஒரு பெரிதா? உன் அறிவுப் பால் குடித்த இந்த மணிமுடி அறிவற்ற நடைபிணமாக உலவமாட்டான் தாயே! சந்தேகம் வேண்டாம்."

"செல்வமே புலமை மட்டும் போதாது. போர் என்றால் இரத்தம் துடிக்கவேண்டும் பகைவர் எங்கே எங்கே என உனது கண்கள் பாயவேண்டும்; வெற்றிவெற்றி யென உனது வீரக்குரல் எழுப்ப வேண்டும்; கதக் கதக் என்று எதிரியின் தலைகளை வெட்டி வீழ்த்தவேண்டும்."

"தாயே! கத்தியால் எதிரியின் தலைகளை வெட்டவேண்டுமா? தலையை வெட்டிவிட்டால் அவர்கள் இறந்துவிட மாட்டார்களா!"

'ஆமாண்டா கண்ணு இறந்துதான் போவார்கள். ஆனால் அதைக் கண்டு நாம் கவலைபடக்கூடாது, போர் என்றால் பிணமலைகள் குவியும். இரத்த ஆறு ஓடும். இவைகளைப் பார்க்கப் பார்க்க வீரனுக்கு உரமெழும்பி வெறிகொள்ளவேண்டும், அதுதான் தளபதியின் வீரம். படை நடத்திச் சென்று பல தடவை வென்றவனுக்குப் பரணி பாடுவார்கள். என் மகன் 'பரணி கொண்டான் எனக் கேட்ட தாயின் மகிழ்வைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அத்தகைய மகனைப் பெற்ற தாய் பாக்கியவதியன்றோ!

எம். வி. துரை

"அறிவும் வீரமும் அறுசுவை உண்டியிலே கலந்து அன்றாடம் ஊட்டுகின்ற எனது அருமைத் தாயே! உனது எண்ணப்படி முன்னேறுவேன். சந்தேகமில்லை. உன் வீரப்பால் குடித்த இந்த மணிமுடி கோழையாகமாட்டான்".

"கண்ணே!" என்று கட்டித் தழுவிக்கொள்கிறாள். "செல்வமே உணவருந்திக் கல்வி கற்கச் செல்லடா" என்று அழைத்துப்போய் வட்டமான தட்டிலே கட்டித்தயிர் கலந்த சோற்றை வெட்டிப்போட்டு, "கண்ணே தொட்டுக்க என்னடா வேண்டும்," என்று கேட்கிறாள்.

"அம்மா உனக்கு எது இட்டமோ அது கொண்டுவாம்மா" என்றான்!

"ஏண்டா எனக்கு எதுவுமே இட்டமில்லை அப்பொழுது!!"

"எனக்கு எதுவும் வேண்டாம் தாயே!"

'போடா போக்கிரிப்பயலே! இஞ்சித் துவையல் கொண்டு வரட்டுமா!"

"அம்மா அதுதான் உன் இட்டம் என்று சொன்னேனே!"

"குறும்புக்காரப் பயல்!"

"அம்மா! இனிமேல் அப்படிச் சொல்லக்கூடாது. பள்ளிக்கு போகும்போது புலவர் என்று சொல்லவேண்டும். போருக்குப் போகும்போது வீரன் என்று சொல்லவேண்டும்."

"சரி, புலவரே! விரைவில் உணவருந்திப் பள்ளிக்குப் போங்கள்!"

சிரிக்கிறான் அவன்! செல்வ மகனை அணைத்து ஒரு முத்தத்தோடு பள்ளிக்கு அனுப்பி வைக்கிறாள்.

செல்வ மகனை வழியனுப்பி அவன் செல்லும் திசை நோக்கி அவனது அழகான நடை கண்டு மகிழ்கிறாள். அவ்வமயம் அவளது கண்களை யாரோ பொத்துவது போல் இருந்தது. திரும்பிப் பார்த்தாள் சிரிப்போடு, "அத்தான்! உங்கள் செல்வமகனைப் பார்த்தீர்களா? அவன் சிங்கார நடையிலும் உங்களது வீரநடை காண்கிறது."

"கண்ணே இத்தென்னவன் மண்ணிலே பிறந்தாலே வீரம் தானாக வந்துவிடுமே!"

"அப்படியா அத்தான்"

"ஆம் கண்ணே, இப்பொழுது பார்! வேலையின்றி எனது தோள்

கள் புடைத்துக்கொண்டு இருக்கின்றன. இன்னும் கொஞ்சநாளில், எனது தோள்களுக்கு வேலை கிடைக்கப்போகிறது.''

"அப்படியென்றால் பாண்டி மன்னருக்கும் வேறுயாருக்குமாவது போர் நடக்கப்போகிறதா''

"ஆமாம் கண்ணே! சிந்து நாட்டானுக்கும் பாண்டிய மன்னருக்கும் பகை முற்றுகிறது. எந்த நேரத்தில் பகை முற்றி எங்களுக்கு விருந்து கிடைக்கப்போகிறதோ!''

"அத்தான்! முன்னணி வீரர்களையே பார்த்துவெட்டி, யானை மீது வருபவனையே வீழ்த்தி, குதிரை வீரனையே கொன்று, திண்தோள் படைத்த தேர் வீரனைப் பார்த்து செவ்வாழை மரம்போல் சாய்த்துவிட்டால், அப்படை சிதறி ஓடிவிடுமல்லவா!''

"ஏது! எனக்கே கற்றுக்கொடுப்பாய்போல் இருக்கே!''

"ஏனத்தான் நல்ல முறைதானே இது என்று கேட்டால்''

"ஆமாம் குதிரைப் படைகளை அழித்தால் ஒரு கரம் இழந்தது போல் ஆகும், யானைப்படைகளை அழித்தால் இருகரம் இழந்தது போல் ஆகும், தேர்ப்படை அழிந்தால் சிரம்போனதுபோல் அப்படைகள் சிதறி ஓடிவிடும்.

"அத்தான்! முதல்நாள் போரிலே ஒரு யானை வீரனைக்கொன்று விழ்த்தவேண்டும், அச்செய்தி கேட்டு நான் ஆனந்தமடைய வேண்டும்''

"அன்பே! என்னை அப்படியா நினைத்தாய்? தேர்வீரனையே கொன்று அவனுடைய படைகளைச் சிதறியோடச் செய்கிறேன் பார்!''

"அத்தான்! (அவன் மார்பைத் தடவுகிருள்) உங்கள் மார்பிலே பட்ட வடுக்களெல்லாம் ஆறிவிட்டதா'

"அன்பே! ஆயிரம் வடுக்கள் இருந்தாலும் உன் அணைப்பிலே அரைநொடிக்குள் அவ்வடுக்கள் ஆறிப்போகாதா''

"போர்க்களத்திலே புயல்போல் தோன்றும் நீர் எனக்குத் தென்றல்போல இன்பமூட்டுவது ஏன் அத்தான்''

"உராய்கின்ற வாளும் வீட்டுருவிச் செல்லுகின்ற ஈட்டியும், ஓடுகின்ற இரத்த ஆறும், உருள்கின்ற தலைகளும் பார்க்கின்ற கண்களிலே குளிர்ந்த முகத்தோடு, மணம்வீசும் மலர் தாங்கிய கூந்தலோடு எத்தனை வடுக்களைத்தான் இன்று பெற்றுவந்தீர் என்று அன்புக்கரத்தால் தழுவிக் களிப்புறுகிருயே, அதனுல்தான்!

"ஆருயிரே! அரிவைக்கோர் கோட்டைபோலும், அன்புக்கோர் குழவிபோலும், அரும்பசிக்குப் பொருளீட்டி, அமர்வந்தால் வாகை சூடும் உங்களை எப்படியத்தான் புகழ்வேன்?''

"கொஞ்சுதலுக்குக் குழந்தை, கூடிமகிழக் கொழுநன், கொடும்போர் புரியக் கடமைவீரன் என்று சொல்லு கண்ணே!''

''அத்தான்'' என்று அவனது மார்பில் சாய்கிருள்.

"கண்ணேபசிக்கிறது. வார்த்தையாலே வயிற்றுப் பசியை விரட்டிவிடுவாய்போல் இருக்கே''

"அதிகப் பசியோ''

"ஆம் அளவுகடந்தபசி'' என்று அவள் கன்னத்தைக் கிள்ளுகிருன். அவள் ஓடுகிருள் சமையலறைக்கு, உணவருந்திக்கொண்டிருக்கும் போது, அம்மா, அம்மா என்று குரல்கேட்டுத்திரும்பிப்பார்க்கிருள்.

'வாடாகண்ணு'' பள்ளிக்குச் சென்று வந்த செல்ல மகனை பக்கத்தில் இருத்திச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிருர்கள்.

*

"பாண்டி நாட்டு வீரர்களே! இங்கு அறிவிப்பது என்னவென்ருல் பகைவன் நாட்டின்மீது படையெடுத்து வந்துவிட்டான். எனவே வீட்டுக்கொருவர் உடனடியாக இன்றே இப்பொழுதே புறப்படுங்கள்!'' என்று ஒருவன் பறை அறிவித்தான்.

உணவருந்திக்கொண்டு இருந்த இவர்களது செவியிலே இந்த முழக்கம் கேட்ட உடனே, போர்! போர்! எனப் போர்க்கோலம்கொள்கிருன், "கண்ணே! போர் முரசு கேட்கிறது, களம் சென்று வருகிறேன், களிப்போடு வழியனுப்பு!''

''அத்தான்! செருக்களம்செல்லத் தடைகூறுவது தமிழர்குல மங்கைகளில் இதுவரை எவளுக்குமே இருந்தது இல்லையே! நான் மட்டும் போகாதீர் என்று சொல்வேனு! போய்வாருங்கள். எதிரியின் படைகளை இருகூருக்கி வெற்றியோடு வீடு திரும்புங்கள்.''

அன்புத் திருமகனைப் பார்த்து ''மணிமுடி! நான் போய் வரட்டுமா'' என்று அவனையே பார்க்கிருன்!

"என்ன அப்பா! என்னையே பார்க்கிறிங்க. உங்களுக்குப் போருக்கு செல்ல இட்டமில்லையா! அப்படியானுல் நீங்கள் வீட்டில் இருங்கள். நான் இன்று போய் எதிரிகளைக் கொன்றுவிட்டு வருகிறேன்.''

"மணிமுடி! என் செல்வமே என்று தழுவுகிருன்; இதோ! புறப்பட்டு விட்டேன் கண்ணே'' என்று புறப்படுகிருன்.

ஆகா! போர் என்ருல் அது வல்லவா போர்! என்றுமே காணுத அளவுக்கு, அந்த மறக்களம் செங்குருதி கண்டது. எரியும் ஈட்டியில் யானைகள் தலைபிளந்து மண்ணிலே சாய்வதும், வீசிடும் வாளால் குதிரைகள் விழுந்து மடிவதும், மின்னுகின்ற வாளின் ஒளியால் கண்ணவிந்து போவோரும், ஓடுகின்ற குருதி வெள்ளத்தால் வழி தெரியாது தேர்கள் குடைசாய்ந்து போவதும் இப்படியாக அன்றைய் போர் நடந்துகொண்டிருக்கிறது!

''ஏ! சிந்துநாட்டெதிரியே! என் முன் நில்லாதே! ஓடிப்போ. என் வாளாலே இறந்துபட்டவர் இன்று எத்தனையோ பேர். நீ பார்த்தால் நல்லவனுகத் தோன்றுகிருய்'' என்ருன் பாண்டி நாட்டு வீரன்.

இதைக்கேட்ட அந்த யானைமீது இருந்த அவன், "கையில் வேல் இருந்தால் வல்லமை அதிகமென்று நினைக்கின்ருயா! உயிர்மேல் நம்பிக்கையிருந்தால் நீ ஓடிப்போ'' என்ருன்.

இந்த வார்த்தைகளை மறத்தமிழன் பொறுப்பானு, "ஓ! என்ன சொன்னுய்?'' எறிந்தான் ஈட்டி! வீழ்ந்தான் மண்மீது! ஓடிவந்த இரத்த வெள்ளம் அவனையும் புரட்டியது பின் அந்தப் படைகளுக்குஎன்னவேலை! திரும்பி ஓடின. வாய்வீச்சுப் படை, வாள் வீச்சு மறவப் படையை வெல்ல முடியுமா? வழக்கம்போல் இருளும் வந்தது.

"அம்மா இருள் வந்துவிட்டது இன்னும் அப்பாவைக் காணோமே" என்று தன் தாயைக் கேட்கிறான் மணிமுடி.

"செல்வமே! வந்துவிடுவார்"

"போம்மா! பொய் சொல்கிறாய்! அப்பாவுக்கு ஏதாவது ஆபத்தோ என்னவோ."

"அப்படி ஒன்றும் ஆகாதடா கண்ணு. எதிரிகளைக் கொன்று, அவர் படைகளை முறியடிக்கச் செய்து ஓரிருவர் மீதியிருந்தால் அவர்களையும் கொன்றுவிட்டுத் தானடா வருவார்."

"அம்மா நான் எப்பொழுது போருக்குப் புறப்படுவது!"

"ஏண்டா கண்ணு, எப்பொழுதென்று நாள் குறிக்கப்பட்டுள்ளதா, நாட்டுக்கு ஆபத்தென்றால் நாளையே புறப்படவேண்டியது தானே!" என்று அவனது மார்பைத் தடவுகிறாள்—மடியில் கிடத்தி.

"என்னம்மா! எனது நெஞ்சிலே போருக்குச் செல்லக்கூடிய உரம் இருக்கிறதா என்று பார்க்கிறீர்களா?"

"ஆமாண்டா கண்ணு, எதையும் தாங்கும் இதயம் வேண்டும். அது உனக்கு இருக்கிறதா என்று பார்க்கிறேன்."

"அம்மா! அந்த வாக்கியத்தை அடிக்கடி ஊட்டுகின்ற அருமைத் தாய் இருக்கும்போது எனது நெஞ்சம் எஃகாக மாறிவிடாதா?"

"செல்வமே" என்று கட்டித் தழுவி முத்தமிடுகிறாள்!

"அம்மா இன்னும் காணோமே அப்பாவை. அவ்வமயம் இதைக் கேட்டுக்கொண்டே வருகிறான். "ஏண்டா இராசா, இதோ நான் வந்துவிட்டேனே!"

உடன் அவனிடம் ஓடுகிறான் மணிமுடி. "அப்பா நானே நான்தான் போருக்குப் போவேன். எனக்கு மட்டும் எதிரிகளைப் பார்க்கணும்; அவர்களோடு சண்டைக்கு போகணும் என்று ஆசையிருக்காதா" என்று அவனது மீசைகளைப் பிடிக்கிறான்.

"சரிடா கண்ணு, நாளை போர் இருந்தால் அனுப்புகிறேன்" என்று அவனைத் தூக்கி ஒரு முத்தம் தருகிறான்.

"ஏனப்பா நாளை போர் இல்லையா?"

"இல்லையடா கண்ணு" சிரிக்கிறான்.

"ஏன் தான் சிரிக்கிறீர்கள். ஏன் போர் நிறுத்தப்பட்டது" என்றாள் அவனது மனைவி.

"கண்ணே இன்றைய போரும் இப்பொழுது நடந்த சம்பவமும் நினைத்தால் சிரிப்பு வருகிறது."

"என்னதான் அப்படி நடந்தது."

"வடக்கத்தியார் கூட்டம் வாள் எடுத்தால் ஓட்டம் என்று இன்று நடந்தது கண்ணே!"

"அப்படியா அத்தான்!"

"ஆமா கண்ணே! இன்று அறுவடைக்கேற்ற நெற்பயிர் போல அரிந்துக்கொண்டே சென்றேன் அந்தப் படைகளை. அங்கே ஒருவன் களிறுமேல் கம்பீரமாக வீற்றிருந்தான். ஓடடா என்றேன். என்னைத் திரும்பச் சொன்னான். பிறகு எறிந்தேனு ஈட்டியை! கீழே விழுந்தான். மீதி அத்தனை பேரும், தாய்க்கோழியையே பருந்து அடித்துக் கொன்றால் மீதமுள்ள அதன் குஞ்சுகள் எங்கு போய் நிற்குமோ, அதுபோல ஓடிவிட்டார்கள், நான் கை கொட்டி நகைத்து வந்தேன்."

"அத்தான் அவர்கள் நாட்டுக்கா ஓடிவிட்டார்கள்!"

"ஆமாம். பின்பு அவர்களைச் சிறைபிடித்து வருவதென அரசர் அறிவித்தார். நாங்களும் படை திரட்டித் தயாராக இருந்தோமே! நன்றாக இருண்டபின் எல்லோரும் அமைதியாக உள்ள அந்த நேரத்திலே வருத்தத்தோடு வாடிய முகத்தோடு மெலிந்த மேனியுள்ள ஒருவன் தள்ளாடித் தள்ளாடி ஓடிவரும் கிழக்குதிரை பூட்டிய தேரிலே வந்தான்! வந்தவன் இருளென்றும் பாராது வெளியிலும் நில்லாது உள்ளே புகுந்தானு!"

"அப்புறம்!" என ஆச்சரியத்தோடு கேட்டாள்.

ஏண்டி அந்தப் பயல்களை நம்பலாமா? அவன் என்ன செய்கிறான் பார்க்கலாம் என்று அவனது பின்னாலே அவனுக்கும் தெரியாமல் வாளும் கையுமாய்ச் சென்றோம்.

ஏதாவது தவறு நடந்தால் ஒவ் வீச்சு என்ற முடிவோடு சென்றோமா!

அவன் இருகரங்களையும் நீட்டிக் கொண்டு அபயம் அபயம் என்று வீழ்ந்தான். இதைக் கேட்ட மணிமுடி கொல்லெனச் சிரித்தான்.

"ஏண்டா கண்ணு சிரிக்கிறாய்" என்றாள் அவனது தாய்!

"பால் குடிக்காத பயல்கள், அப்படிக் குடித்திருந்தால் வீரம் இருக்கும்," என்றான். இதைக் கேட்ட அவனது தந்தை அவனது தோளைத் தடவிக்கொண்டு, ஆமாம் கண்ணே அவர்கள் எந்தக் காலத்திலாவது தமிழரசர்களை வென்றதாகச் சரித்திரம் காட்டுகிறதா? இல்லையே! இன்றுகூட நம்மவர், அவர்கள், வால் பிடித்துத் திரியாவிட்டால் இவ்வளவு அவதியேது? பிறகு அரசர் ஆட்களை அழைத்தார்.

யானைமீது உள்ள, அம்பாரியை யகற்று. அதன் மணிகளைக்கழட்டு, புரவிகளைக் கட்டு. யானைகளை அப்புறப் படுத்துங்கள் என்று கூறினார்.

"அப்பா ஒரு சந்தேகம்"

"என்னடா கண்ணு"

"சமயத்தில் உள் நுழைந்து சதிக்கு வழிவகுத்துக்கொண்டாலு அந்த ஆள்..."

"அவ்வளவு ஏமாளிகளா நாம் விழிப்போடு இருந்து, அவர்கள் வாலை ஒட்ட நறுக்கவேண்டாமா"

"ஆமாப்பா அது தான் சரி அப்போ, போர் நிறுத்தியது நல்லது"

பாண்டிய மன்னன் போருக்கு ஆயத்தமாக இருந்த சமயம், ஒருவன் வந்து ஒரு சில வார்த்தைகள் கூறவே போர் நிறுத்தப்பட்டது அவன் அடிபணிந்தான் என் பொருளே இப்பாடல்.

வயலைக் கொடியின் வாடிய மருங்கின்
உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே! அதற்கே
ஏணியும் சீப்பும் மாற்றி
மாண்வினை யானையும் மணிகளைந்தனவே

புறம் 30